ISSN 1391-9504


PUBLIC LIBRARY

# Vijey விஜய்
# விஜய்

10.12.2014 - மலர் 11, இதழ் 41



## 'புளூட்டோ' மீண்டும் கிரக அந்தஸ்தைப் பெறுமா?



## பேர்லின் சுவர் தகர்க்கப்பட்டு 25 வருடங்கள்

## உலக சொத்தாகக் கருதப்படும் ஈரநிலங்கள்

வில்பத்து செல்வதற்கான அரிய வாய்ப்பு

விபரம் உள்ளே...

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1) கீழே இருக்கும் குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து, சரியான சொற்களை அமைக்க.


2) அண்ணாவும் தங்கையும் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்?

..........................................................................









aht toab ishf


_ _ _   _ _ _ _   _ _ _ _


3) படகு செல்வது;

1. தரையில் 2. நீரில் 3. வானில்

4) படத்திற்கமைய, நீரில் துள்ளிக் குதிப்பவை;

1. நத்தைகள் 2. தவளைகள் 3. மீன்கள்




1) Capital letter குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மீனினதும் நிறத்திற்கேற்ப, அதனுடன் பொருந்தக்கூடிய Small letter குறிக்கப்பட்டுள்ள மீனில் நிறந்தீட்டுங்கள்.

2) இங்கு மொத்தம் எத்தனை மீன்கள் உள்ளன?

..........................................................

3) மீன்களின் நிறங்களை எழுதுக.

..........................................................

## எனது வீட்டுத்தோட்டம்



1) எனது வீட்டுத் தோட்டத்தில் ............................ வளர்ந்துள்ளன.

(பூஞ்செடிகள். தென்னை மரங்கள்)

2) அங்கிருக்கும் அப்பிள் மரத்தில் நிறைய .................... காய்த்துள்ளன.

(மாம்பழங்கள்/ அப்பிள் பழங்கள்)


3) நான் தினமும் தோட்டத்திலுள்ள செடிகளுக்கு .................. பாய்ச்சுவேன்.


(மண்/ நீர்)

4) எனது வீட்டுத்தோட்டத்திற்கு விதவிதமான .............. வந்து போகும்.

(யானைகள்/ பறவைகள்)

A பகுதியில் இருக்கும் பழ வகைகளின் எண்ணிக்கைக்கமைய, கீழுள்ள வரைபில் நிறந்தீட்டி, வினாக்களுக்கு விடையளிக்க.




1) எத்தனை ஆரஞ்சுப் பழங்கள் உள்ளன? [ ]

2) அதிகமாக இருக்கும் பழவகை எது? ............

3) வாழைப்பழங்களைவிட, எத்தனை அப்பிள்கள் கூடுதலாக உள்ளன? [ ]

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

# பேர்லின் சுவர் தகர்க்கப்பட்டு 25 வருடங்கள் பூர்த்தி



ஜேர்மனி நாட்டை 'கிழக்கு ஜேர்மனி' மற்றும் 'மேற்கு ஜேர்மனி' என்று பிரித்து 1961 இல் நிர்மாணிக்கப்பட்ட பேர்லின் சுவர், 1989 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 9 ஆம் திகதி தகர்க்கப்பட்டது. இச்சம்பவம் நிகழ்ந்து இவ்வருடம் நொவெம்பர் மாதத்துடன் 25 வருடங்கள் பூர்த்தியானதையிட்டு, கடந்த நொவெம்பர் மாதம் 9 ஆம் திகதி ஜேர்மனியின் பேர்லின் நகரில் மிகவும் சிறப்பாக வெள்ளி விழா கொண்டாடப்பட்டது. ஜேர்மனியின் அதிபர் ஏஞ்சலா மேர்க்கல் மற்றும் சோவியத் ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி மிகைல் கெர்ப்பசேவ் ஆகியோர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில், 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து சிறப்பித்திருந்தனர்.





விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

## 15 கி.மீ. தூரத்திற்கு...

ஒரு நாட்டினையும் அந்நாட்டு மக்களையும் இரண்டாகப் பிளவுபடுத்தி வைத்திருந்த இந்த பேர்லின் சுவரின் எஞ்சியிருந்த இடிபாடுகளில் சுமார் 15 கி.மீற்றர் தூரம் வரையான பகுதி ஹீலியம் பலூன்களினாலும் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுவர் தகர்த்துடைக்கப்பட்டதனை நினைவுகூரும் முகமாகவும், பனிப்போரின் நிறைவினை அடையாளப்படுத்தும் முகமாகவும் பல வண்ண பலூன்கள் பறக்கவிடப்பட்டன.

## பிளவுற்ற ஜேர்மனி


இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பின்னர், 1949 இல் ஜேர்மனி நான்கு பகுதிகளாகப் பிளவுற்றது. இதன்படி, மேற்கு மற்றும் வட க்கு ஜேர்மனியின் மூன்று பிரதேசங்களின் நிர்வாகத்தினை பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் பொறுப்பேற்றன. கிழக்கு ஜேர்மனியின் நிர்வாகம் ரஷ்யாவிடம் சென்றது.

1961 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 13 ஆம் திகதி பேர்லின் சுவரின் நிர்மாணப்பணிகள் ஆரம்பமாயின. அத்துடன், இச்சுவரினை ஜனநாயகத்தினதும் கம்யூனிசத்தினதும் பிளவின் அடையாளம் என்றும் குறிப்பிட்டனர். 12 அடி உயரமான பேர்லின் சுவர், கிழக்கு ஜேர்மனியின் பெரும் பகுதியில் சோவியத்தின் அதிகாரத்தினைப் பலப்படுத்தும் வகையில் சுமார் 155 கிலோமீற்றர் தூரத்திற்கு நிர்மாணிக்கப்பட்டது. அத்துடன், பாதுகாப்பு அரண்களும் கண்காணிப்புக் கோபுரங்களும் அமைக்கப்பட்டன. இந்த சுவர் நிர்மாணிப்பை அடுத்து, தமது உறவினர்களையும் நண்பர்களையும் இழந்த ஜேர்மனியர்கள் பலர், பேர்லின் சுவரை தாண்டிக் குதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் பலியாகினர். இக்காலப்பகுதியில் மேற்குப்பகுதியில் வசித்தவர்கள் பேர்லின் சுவரில் பல ஓவியங்களை வரைய ஆரம்பித்தனர். எவ்வாறாயினும், சோவியத் கூட்டரசாங்கத்தின் வீழ்ச்சியின் பின்னர், 1989 இல் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகளின் அடிப்படையில்,பேர்லின் சுவரினைத் தகர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

-அஷ்விதா

## பேர்லின் சுவர் 1961-1989

இரண்டாம் உலகப்போரின் முடிவுடன் ஜேர்மனி நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.




சுவரின் பாதையும் பாதுகாப்பு அரண்களும்
முழு நீளம் 155 கி.மீ.

சுவர் இருந்த அமைப்பும் இன்றுள்ள சுவரின் எஞ்சிய பகுதிகளும்




1. வோல்பாக்
2. பர்னயுர் நகர நினைவு பகுதி
3. ச்சயுஸ்ஸி ஸ்ட்ராசே காவல் அரண்
4. இன்வெலிடன் மயானபூமி
5. சார்லி காவல் அரண்
6. கிழக்கு பகுதி கலையரங்கு








| சுவர் பற்றிய விபரம் | |
|---|---|
| கொன்க்றீட் பதாதை | 106 km |
| இரும்பு வேலி | 66.5 km |
| பதுங்கு குழி | 20 |
| காவல் நாய்கள் | 259 |
| வாகனங்களைத் தடுக்கும் அரண்கள் | 105.5 km |
| மின்கம்பி வேலி | 127.5 km |
| வீதி சஞ்சார பாதை | 124.3 km |

| வருடாந்தம் கிழக்கு ஜேர்மனியில் இருந்து மேற்கு ஜேர்மனிக்கு வந்த மக்கள் (சராசரியாக) | |
|---|---|
| 1949 - 1960 | 210,962 |
| 1961 1 ஜனவரி - 13 ஓகஸ்ட் | 155,402 |
| 1961 ஓகஸ்ட் 13 கிழக்கு ஜேர்மனி சுவர் நிர்மாணிப்பு பணி ஆரம்பமானது | |
| 14 ஓகஸ்ட் - 31 டிசம்பர் | 51,624 |
| 1962 - 1977 | 10,840 |
| 1980 - 1986 | 316 |
| 1989 நொவெம்பர் 9 இல் சுவர் தகர்க்கப்பட்டது. | |

## 1983 இல் பேர்லின் சுவர் இருந்த விதம்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பே சிறந்தது

குமரன் தன் தாய் தந்தையுடன் தனது வீட்டில் வசித்து வந்தான். அப்போது வீட்டின் முன் மூன்று வயதானவர்கள் வந்து 'உள்ளே வரலாமா' என்று கேட்டனர்.

குமரனின் தந்தையார் "வாருங்கள்" என்றார்.

"நாங்கள் மூவரும் ஒன்றாக வரமுடியாது. யாராவது ஒருவர்தான் வரமுடியும். என் பெயர் பணம். இவர் பெயர் வெற்றி. இவர் பெயர் அன்பு. எங்கள் மூவரில் ஒருவர்தான் ஒரு வீட்டிற்குள் செல்லமுடியும். எங்கள் மூவரில் உங்களுக்கு யார் வேண்டுமோ அவரை அழைத்துக்கொள்ளுங்கள்" என்றார் அவர்களில் ஒருவர்.

குமரனின் தந்தை, "வெற்றியை அழைக்கலாம். நாம் எந்த வேலையைச் செய்தாலும் அதில் வெற்றியடையலாம்" என்றார். ஆனால், குமரனோ "அப்பா பணத்தையே உள்ளே அழைக்கலாம். நம்மிடம் பணம் சேர்ந்து விட்டால் எல்லாவற்றையும் வாங்கலாம்" என்றான்.

ஆனால், குமரனின் தாயோ "வேண்டாம் அன்பையே அழைக்கலாம். அன்புதான் முக்கியம்" என்றார். பின்னர் மூவரும் "அன்பு உள்ளே வரட்டும்" என்றனர்.

அன்பு உள்ளே வர, அவரைத் தொடர்ந்து வெற்றியும், பணமும் கூடவே உள்ளே நுழைந்தனர். உடனே குமரனின் அம்மா, "அன்பை மட்டும்தானே உள்ளே அழைத்தோம்" என்றார்.

அப்போது அன்பு சொன்னார், "நீங்கள் பணத்தையோ, வெற்றியையோ அழைத்திருந்தால் மற்ற இருவரும் வெளியே நின்றிருப்பார்கள். ஆனால், அன்பான என்னை வரச் சொன்னதால் நான் இருக்கும் இடத்தில்தான் பணமும், வெற்றியும் இருக்கும். ஆகவே, அவர்களும் உள்ளே வந்துவிட்டனர் என்றார்.

**அன்பான உள்ளம் இருந்தால் நம் வாழ்வில் வெற்றியும் தேவையான வசதிகளும் தானாகவே வந்துவிடும்.**

# ஒற்றுமை

நான்கு மாடுகள் மிகவும் ஒற்றுமையாகவும் நண்பர்களாகவும் இருந்தன. அவை தினமும் காட்டுப்பகுதிக்குச் சென்று புல் மேய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தன. நன்கு கொழுத்துக் காணப்பட்ட அவற்றை அடித்து உண்ண சிங்கம் ஒன்று விரும்பியது. அதற்காக அது ஒருமுறை முயன்றபோது நான்கு மாடுகளும் சேர்ந்து சிங்கத்தைத் தாக்கி அதற்கு காயத்தை ஏற்படுத்த, தப்பினால் போதும் என அவற்றிட மிருந்து சிங்கம் தப்பியோடியது.





பின்னர் ஒருநாள் தனக்கு ஆலோசனைகள் கூறும் நரியைப் பார்த்து சிங்கம் அந்த மாடுகள் பற்றிக் கூறியது. அதற்கு நரி "சிங்க ராஜாவே! அவை ஒற்றுமையாக இருப்பதாலேயே பலமுள்ளனவாய் தெரிகின்றன. அவற்றைப் பிரித்தால் தனித்தனியாக அவற்றை அடித்து உண்ணலாம்' என்று தெரிவித்ததோடு, அவற்றைப் பிரிக்கும் பணியையும் ஏற்றது.

ஒருநாள் நான்கு மாடுகளில் ஒன்று சற்று தனியாக இருந்தபோது நரி அதைப் பார்த்து 'உங்கள் நால்வரில் நீயே பலசாலி. ஆகவே, நீ தனித்து புல் மேயப்போனால் உனக்கு அதிக புற்கள் கிடைக்கும். மேலும் உன்னுடைய பலமும் அப்போதுதான் மூன்று பேருக்கும் புரியும்' என்றது. அப்படியே மற்ற மூன்று மாடுகளிடமும் நரி சொன்னது.

நரி சொல்வதை உண்மை என்று நம்பிய மாடுகள் அடுத்த நாள் தனித்தனியாகப் புல் மேய தனி இடங்களுக்குச் செல்ல ஆரம்பித்தன. இதனால், தினமும் ஒவ்வொன்றாக அவற்றை சிங்கம் கொன்று தின்றது.

மாடுகள் ஒற்றுமையாக பிரியாமல் இருந்திருந்தால் பலமுள்ளதாக இருந்திருக்கும். பிரிந்ததால் அவை பலமற்றுப் போய் மடிந்த[illegible]

**ஒற்றுமையாய் இருந்தால் எம்மால் பல சாதனைகளை சாதிக்க முடியும். ஒற்றுமை இல்லாவிடில் நாம் செயலற்றுப் போய்விடுவோம்.**



## அக்பர்-பீர்பால் கதைகள்

# உண்மையும் பொய்யும்

ஒருமுறை முகலாயப் பேரரசராய் திகழ்ந்த அக்பருக்கு உண்மை எது, பொய் எது என்பதை எவ்வாறு கண்டுபிடிப்பது, அதற்கான தூரம் எவ்வளவு என்ற சந்தேகம் வந்துவிட்டது. தன் அரசவை அமைச்சர்களை அழைத்து தனது சந்தேகத்தைக் கூறி அதனை தீர்த்துவைக்குமாறு கோரினார்.

எந்த அமைச்சருக்கும் அதற்கான விடை தெரியவில்லை. அப்போது பீர்பால் அரசரைப் பார்த்து "மன்னா...! உண்மைக்கும் பொய்க்குமான இடைவெளி நான்கு விரற்கடை தூரம்" என்றார்.

அக்பரும்... "அது எப்படி... உங்களால் அதை நிருபிக்க முடியுமா?" என்று கேட்டார்:-

உடனே பீர்பால்... தனது இடது கையை எடுத்து, இடது கண்ணிலிருந்து இடது காதுக்கு தனது நான்கு விரல்களை வைத்துக் காட்டினார். பின்னர் "அரசே! இதுதான் உண்மைக்கும் பொய்க்குமான தூரம். எந்த ஒரு விடயத்தையும் காதால் கேட்பது பொய்யாக முடியலாம். ஆனால், கண்ணால் பார்ப்பது பொய்யாக வாய்ப்பில்லை. எனினும், கண்ணால் கண்டதை சற்று தீர விசாரித்தால் அதுவே மெய்யாக முடியும்" என்றார்.



நாமும் எந்த ஒரு விடயத்தையும் கேட்பதன்மூலம் அதை நம்பிவிடாது, அதனைப் பார்த்து, தீர விசாரித்து உண்மையை உணரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உடவத்தகெலே வனப்பூங்கா

‘உடவத்தகெலே வனப்பூங்கா’ அல்லது ‘உடவத்தகெலே சரணாலயம்’ ஆனது, இலங்கையின் வரலாற்றுப் புகழ்மிக்க கண்டி நகரத்தில் அமைந்துள்ளது. இது, தற்போதளவில் இலங்கை வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.







உயிர்ப்பல்வகைமைத்தன்மையுடன் கூடிய, வரலாற்று ரீதியாகவும் முக்கியத்துவம் பெறுகின்ற இந்த வனப்பூங்காவானது, ஈரவலயக் காட்டுக்குரிய இயல்புகளைக் கொண்டது.

105 ஹெக்டெயர் நிலப்பரப்பினை உள்ளடக்கியிருக்கும் இந்த உடவத்தகெலே வனப்பூங்கா, 1856 ஆம் ஆண்டு பாதுகாப்பு வனமாகவும், 1938 ஆம் ஆண்டு வனவிலங்குகள் சரணாலயமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் உயர் பகுதி ‘கொடி மலை’ என அழைக்கப்படுகின்றது. கடல் மட்டத்திலிருந்து 1800 அடி உயரத்தில் இந்த வனப்பூங்கா அமைந்துள்ளது. இந்த வனப்பகுதியில் நாக மரங்கள் ஏராளமாகப் பரவிக் காணப்படும் பகுதியானது ‘நாக வனம்’ என அழைக்கப்படுகின்றது.

அதிகூடிய உயிர்ப்பல்வகைமைத்தன்மை நிலவும் சுற்றாடல் தொகுதியையுடைய இந்த வனாந்தரப் பகுதியில், 405 இற்கும் மேற்பட்ட தாவர வகைகள் உள்ளன. அத்துடன், அருகி வருவதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள 81 விதமான பறவையினங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இங்கு காணப்படும் நீரோடைகளில் மீன்கள், ஆமைகள், கல்லாமைகள் என்பனவும் காணப்படுகின்றன. மேலும் 75 விதமான வண்ணத்துப்பூச்சிகளும் இங்குள்ளதாகக் கூறப்படுகிறது.






இந்த வனப்பூங்காவினுள் நுழையும்போதே, அலங்கார நீர்ப் பொய்கையொன்றைக் காணக்கூடியதாக உள்ளது. இது மன்னர் காலத்தில் மன்னர்கள், அரசிகள் உட்பட, அரச குடும்பத்தினர் பயன்படுத்திய பொய்கையாகும். தலதாமாளிகையின் முன்னாலுள்ள ‘போகம்பர’ வாவியின் மத்திய பகுதியில் அமைந்துள்ள சுரங்கப்பாதையொன்றினூடாக இந்த பொய்கைக்கு வரக் கூடியதாக இருந்ததென முற்காலத்தில் கருதப்பட்டுள்ளது. கொடி மலையை அண்டிய பகுதியில் 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த விசாலமான தாவரக்கொடியொன்றும் காணப்படுகின்றது.

ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கிலேயருக்கும் சிங்களவர்களுக்கும் இடையே நடைபெற்ற யுத்தமொன்றில் இறந்த ஆங்கிலேயப் படை வீரர்கள், சேனாதிபதிகள் மற்றும் ஆங்கிலப் பிரபுக்களினது 163 கல்லறைகள் அடங்கிய மயானமும் இங்கு காணப்படுகின்றது.

(அ)



தமிழ் FM வானொலியில்
வார நாட்களில் மாலை 3 மணி முதல் 5 மணி வரை
‘ஆறாம் அறிவு’ நிகழ்ச்சி கேளுங்கள்...
விஜய் சந்தா பரிசைப் பெறுங்கள்...!



தகவல்கள், விஞ்ஞான விளக்கங்கள், கேள்விகள்,
கணிதப் புதிர்கள் - இன்னும் பல சுவையான
அம்சங்களோடு - ஆறாம் அறிவு!
தமிழ் FM ▶ வன்னி 99.5 FM, யாழ்ப்பாணம் 99.7 FM
நாடு முழுவதும் 107.8 FM
இணையத்தில்: www.tamilfm.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லிஸ்பன் நகரில் இரு

## இலங்கையில் போர்த்து

எமது நாட்டுக்கு வருகை தந்த போர்த்துக்கேயர் சிறிது சிறிதாக எமது நாட்டின் கரையோரப் பிரதேசங்கள் முழுவதிலும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொண்டனர். இவ்வாறு அவர்கள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட கோட்டை மன்னர்களின் பலவீனங்களும் ஒற்றுமை இன்மையும் முக்கிய காரணங்களாக அமைந்தன.

எவ்வாறாயினும், போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தால் கோட்டை தர்மபால மன்னன் நன்கொடை உறுதி ஒன்றின்மூலம் 1597 இல் கோட்டை ராச்சியத்தை போர்த்துக்கேயரிடம் கையளித்தான். அதனால், கோட்டை ராச்சியத்தின் முழு ஆட்சி அதிகாரமும் போர்த்துக்கேயரின் வசம் வந்தது. போர்த்துக்கேய தளபதி நாயகம் கோட்டை இராச்சியத்தின் பிரதானியாக இருந்தாலும் மல்வானை மன்னனாக தர்மபால மன்னனே திகழ்ந்தான். இந்நிலையில் போர்த்துக்கேயருக்கு எதிராக மக்கள் திரண்டனர். அவர்கள் சீதாவக்கை ராச்சியத்தின் மன்னர்களுடன் இணைந்துகொண்டனர். சீதாவக்கை மன்னர்களும் போர்த்துக்கேயரை இந்நாட்டில் இருந்து துரத்த பெரும் முயற்சிகளை எடுத்தனர்.



### மல்வானை ஒப்பந்தம் - 1597

* இளவரசன் தர்மபாலன் மரணித்து இரண்டு தினங்கள் கழிந்தபின், போர்த்துக்கேய தளபதி நாயகமாகிய தொன் ஜெரனிமோ என்பவர் அசவேதுவின் அரச பிரதானிகளை அழைத்து இளவரசன் தர்மபாலனின் இறுதி விருப்பமாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயமாகிய கோட்டை ராசதானி போர்த்துக்கல் பேரரசனுக்கே சொந்தம் என்பதை அறிவித்தார்.
* அத்துடன், புராதன சிங்கள சட்டத்தின் படி, கோட்டையை ஆட்சிசெய்வதற்கு இரு பிரிவினரும் இணங்கினர்.
* இந்த இணக்கம் அசவேதுவின் மல்வானை உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நிகழ்ந்தமையால் அதனை மல்வானை ஒப்பந்தம் அல்லது மல்வானை மகாநாடு என அழைத்தனர்.
* இந்நிகழ்வில் போர்த்துக்கேயரின் கொடியை ஏற்றி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதாகவும் சகலரும் முழங்காலிட்டு போர்த்துக்கேய மன்னனுக்கு ஆதரவளிப்பதாக சத்தியம் செய்ததாகவும் வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### சீதாவக்கை ராச்சியம் (1521-1594)

* மூன்று கோறளை, நான்கு கோறளை, தெனவக்கை ஆகிய பல பிரதேசங்களை எல்லையாகக் கொண்டு 1521 இல் ஆரம்பிக்கப்பட்ட சீதாவக்கை ராச்சியம் 1582 இல் இலங்கையின் முக்கிய ராசதானியாக பரிணமித்தது.
* போர்த்துக்கேயரை இந்நாட்டில் இருந்து துரத்தும் நோக்குடன் முனைப்புடன் செயற்பட்ட சீதாவக்கை மன்னர்கள் றைகம் பண்டார மன்னனின் மரணத்தின் பின் 1538 இல் அந்த ராச்சியத்தையும் 1565 இல் கோட்டை ராச்சியத்திற்குரிய பெருமளவு பிரதேசங்களையும், 1582 இல் மலையக ராச்சியத்தையும் கைப்பற்றி இந்நாட்டில் பலம்வாய்ந்த ராச்சியத்தை அமைத்தனர்.



### சீதாவக்கை மன்னர்கள்

* சீதாவக்கை மாயாதுன்னை மன்னன் (1521-1581)
* முதலாம் ராஜசிங்க மன்னன் (1581-1592) (வயோதிபமடைந்திருந்த மன்னன் மாயாதுன்னை 1578 இல் சீதாவக்கையின் ஆட்சிப்பொறுப்பை இளவரசன் ராஜசிங்கனிடம் கையளித்து காப்பாளராக செயல்பட்டார்)

### சீதாவக்கையின் எழுச்சி

* சீதாவக்கை மாயாதுன்னை மற்றும் அவனது மகனாகிய முதலாம் ராஜசிங்கன் ஆகியோர் போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கையைக் கடைப்பிடித்தனர்.
* கோட்டை தர்மபால மன்னன் 1557 இல் கத்தோலிக்க மதத்தைத் தழுவியமையால் மக்கள் மன்னனிடம் இருந்து தூர விலகினர்.
* பௌத்த பிக்குகள், பிரபுக்கள் மற்றும் சாதாரண மக்கள் கோட்டை ராச்சியத்தை கைவிட்டு சீதாவக்கைக்குச் சென்றனர்.
* சீதாவக்கை மன்னர்களே, பௌத்த சமயத்தின் பாதுகாவலர்கள் என மக்கள் எண்ணினர்.
* அரச உரிமைக்குரிய குறியீடாக இருந்த தந்ததாது சீதாவக்கை ராச்சியத்திற்கு உரித்துடையதாக மாறியது.
* தர்மபால மன்னன் கத்தோலிக்க சமயத்தை தழுவிய பின் பௌத்த பிக்குகளை துன்புறுத்தியதோடு, விகாரைகளுக்குரிய இடங்களை கத்தோலிக்க குருமார்களுக்கு கையளித்தமை குறித்து மக்கள் தமது வெறுப்பை வெளிப்படுத்தினர்.
* விவசாயத்தை கவனிப்பாரற்று கைவிட்டமையால் மக்களின் வெறுப்பை சம்பாதிக்கவேண்டி ஏற்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ந்து கொழும்பிற்கு வந்த போர்த்துக்கேயர்

## ...க்கேய யுகத்தின் முக்கிய நிகழ்வுகள்







சீதாவக்கை ராசதானி விரிவடைதல்

### மன்னன் மாயாதுன்னை (1521-1581)

* 1527 இந்தியாவின் கள்ளிக்கோட்டையின் இஸ்லாமிய ஆட்சியாளனாகிய செமொரியனின் உதவியுடன் கோட்டை ராச்சிய போர்த்துக்கேயருக்கு எதிராக தாக்குதல் நடத்தியமை.

* 1537 செமொரியனின் படைகளின் உதவியுடன் கோட்டை ராச்சியத்திற்குரிய பிரதேசங்களை தாக்கியமை.

* 1539 இல் செமொரியனின் உதவியுடன் கோட்டை போர்த்துக்கேயருக்கு எதிராக போர் புரிந்தமை.

* இந்த விதமாக 1536 முதல் 1539 வரை மாயாதுன்னைக்கும் புவனேகபாகுவிற்கும் இடையில் பல்வேறு யுத்தங்கள் நடைபெற்றன.

* 1547 இல் யாழ்ப்பாண ராச்சியத்தின் மன்னனாகிய செகராசசேகரத்தின் உதவியுடன் கோட்டை ராச்சியத்தை ஆக்கிரமித்தமை.

* 1557 இல் கோட்டை தர்மபால மன்னன் கத்தோலிக்க மதத்தை தழுவியமையால் இந்நாட்டின் தலைமை அரசனாக மக்கள் மாயாதுன்னையை ஏற்றுக் கொண்டனர். இந்நிலையை சாதகமாக்கிக்கொண்டு செயற்பட்ட மாயாதுன்னை மூன்று திசைகளிலும் கோட்டை ராச்சியத்தை சுற்றிவளைத்து தாக்கியதோடு, நீண்ட காலமாக அதனை முற்றுகையின் கீழ் வைத்திருந்தான்.

* 1562 இல் மாயாதுன்னை மன்னன் தனது மகனாகிய இளவரசன் ராஜசிங்கன் தலைமையில் கோட்டை ராச்சியத்தை ஆக்கிரமிக்கும் நோக்குடன் படையொன்றை அனுப்பினான். முல்லேரியாவில் நிகழ்ந்த கடும் போரில் போர்த்துக்கேயர் படுதோல்வி அடைந்தனர்.

* 1564 இல் மாயாதுன்னை மன்னனின் தலைமையில் இளவரசன் ராஜசிங்கன் கோட்டை மீதும் கோட்டை ராச்சியப் பகுதிகள் மீதும் ஒரே நேரத்தில் கடும் தாக்குதலை நடத்தினான். இதனால், தோல்வி அடைந்த தர்மபாலன் 1565 இல் கோட்டையைக் கைவிட்டு கொழும்பில் குடியேறினான்.

* 1565 இல் கொழும்பைச் சுற்றியுள்ள பிரதேசங்களைத்தவிர கோட்டை ராச்சியத்திற்குரிய சகல பிரதேசங்களும் மாயாதுன்னை மன்னனின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

* 1580 ஒகஸ்ட் 12 ஆம் திகதி தர்மபால மன்னன் நன்கொடை உறுதியாக கோட்டை ராச்சியத்தை போர்த்துக்கேயரிடம் கையளித்தமையால் சீதாவக்கையின் பலம் மென்மேலும் அதிகரித்தது.

* 1579-1581 காலகட்டங்களில் மன்னன் மாயாதுன்னை இடையிடையே தாக்குதல்களை நடத்தியபடி கொழும்பு கோட்டையை சுற்றிவளைத்தான்.

* 1581 இல் மாயாதுன்னை மன்னன் மரணமடைந்தான்.

### முதலாம் ராஜசிங்க மன்னன் (1581-1592)

* போர்த்துக்கேயரின் ஆட்சியின்போது இந்நாட்டில் தோன்றிய போர்திறன்மிகு இளவரசனாக கருதப்பட்ட இவன் 1578 முதல் சீதாவக்கை ராசதானியின் உத்தியோக பற்றற்ற மன்னனாக ஆட்சிபுரிந்தான்.

* சீதாவக்கை அரசு பலம் மிக்கதாக எழுச்சிபெற்றது இவனது ஆட்சிக்காலத்திலேயே ஆகும்.

* இவர் 1562 இல் முல்லேரியாவில் போர்த்துக்கேயரை படுதோல்வி அடையச்செய்தமை.

* 1581 இல் கொழும்பு கோட்டைமீது கடுந்தாக்குதலை நடத்தி அதனை சுற்றிவளைத்தமை.

* 1582 இல் மலையக ராச்சியத்தின் மீது தாக்குதல் நடத்தி சீதாவக்கை ராச்சியத்துடன் இணைந்து தீவின் பலமிக்க ராச்சியமாக சீதாவக்கையை உருவாக்கியமை.


-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம்

பெயர்: ..................................................

★ சரியான விடையை தெரிவுசெய்து அதன்கீழ் கீறிடுக.

01) 


1) 16, 8    2. 16, 6    3. 5, 15

★ கூண்டுக்குள் இலக்கங்களை இனங்கண்டு, A, B பகுதிகளில் வரவேண்டிய எண்களைக் காண்க.

| | | |
|---|---|---|
| 20 | 16 | 4 |
| 42 | 36 | 6 |
| A | 25 | B |

02) A யில் வர வேண்டிய எண் யாது?

1. 4    2. 5    3. 9

03) B யில் வர வேண்டிய எண் யாது?


1. 30    2. 9    3. 4

04) தாயின் வயது 30 வருடங்கள். மகளின் வயது தாயின் வயதின் அரைவாசியிலும் ஏழு குறைவாகும் எனின், மகளின் வயது யாது?


1. 7    2. 8    3. 15

05) ஒரு சதுரக் காணியைச் சுற்றி 2 மீற்றருக்கு இடையில் இடைவெளி விட்டு தூண்கள் நடப்பட்டிருந்தன. ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும் போது 10 கம்பங்கள் இருந்தன எனின், காணியின் சுற்றளவு யாது?

1. 40m    2. 80m    3. 72m

06)  இற்கு பொருத்தமானது எது?






07) 846, 287, 1503 இவ்வெண்களை இரண்டால் வகுக்கும்போது, மிகுதியாக 1 வரும் எண் அல்லாதது எது?

1. 287    2. 1503    3. 846

08) நீலம், சிவப்பு, மஞ்சள் என்ற ஒழுங்கில் மின்குமிழ்கள் தொங்கவிடப்பட்டுள்ளன எனின், 29 ஆவது மின்குமிழின் நிறம் யாது?

1. நீலம்    2. சிவப்பு    3. மஞ்சள்

09) பின்வரும் கணித செய்கையில் பிழையானது எது?

1. 90 x 9+19 = 829
2. 100 x 10-200 = 800
3. 40 x 10+100 = 300

10) தராசில் பாரம் குறைவான பகுதியில் இடக்கூடிய உருக் கூட்டம் யாது?



1. □ □ ○    2. ○ □
3. ○ ○ □

கடந்தவார விடைகள்... 20 ஆம் பக்கத்தில்




★ பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையை தருக.

11) △ + □ = 7    ✡ − □ = 4

□ + ✡ = 10

1. △ இன் பெறுமானம் யாது? ...........................
2. □ இன் பெறுமானம் யாது? ...........................
3. ✡ + △ = ...........................

12) மணித்தியாலத்திற்கு 48km வேகத்தில் சென்ற மோட்டார் வாகனம் ஒன்று காலை 11:30 இற்கு A என்ற இடத்தில் பயணத்தைத் தொடங்கி, மாலை 1:00 மணிக்கு B என்ற இடத்தை அடைந்தது எனின், A இற்கும் B இற்கும் இடையிலான தூரம் யாது?

...........................................

13) ஒரு சங்கத்தில் 10 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் மாதத்திற்கு ஒரு தடவை ஒழுங்குமுறையில் ஒவ்வோர் உறுப்பினரின் வீட்டில் கூடுவர். சங்கர் என்பவரின் வீட்டில் சென்ற மார்ச் மாதம் கூட்டம் நடைபெற்றது. சங்கர் வீட்டில் அடுத்த கூட்டம் எந்த மாதத்தில் நடைபெறும்? ...................................

14) 0.8, 0.2, 1.1, 0.5 இவ்வெண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

...........................................

15) ராணி, சுதன், சீதா, ராமன் ஆகியோர் பரீட்சைக்குத் தோற்றினார்கள். ராமனைவிட 5 புள்ளிகள் கூடுதலாக ராணி பெற்றதுடன், சீதா சுதனைவிட 10 புள்ளிகள் குறைவாக பெற்றிருந்தாள். ராணியும் சீதாவும் சமமான புள்ளிகளைப் பெற்றனர். கூடிய புள்ளிகளைப் பெற்றவர் யார்? ...........................................

16) ஒரு பிள்ளைக்கு தினமும் காலையும் மாலையும் உணவாக மூன்று பிஸ்கெட்டுக்கள் வீதம் வழங்கப்படுகின்றன. இதற்காக 72 பிஸ்கெட்டுக்கள் அடங்கிய பெக்கட் ஒன்று எத்தனை நாட்களுக்குப் போதுமானது? ...........................................

17) □ இவ்வுருவில் உள்ள சமச்சீர் அச்சுக்களை வரைந்து காட்டுக.

18) நிசாரின் வீட்டில் தேநீர் தயாரிப்பதற்கு 1 வேளைக்கு 9g தேயிலை தேவைப்படின், 1kg தேயிலைத் தூளில் எத்தனை வேளைக்கு தேநீர் தயாரிக்கலாம்? ...........................

19) 125g பச்சை மிளகாயின் விலை ரூபா 10 எனின், 100g பச்சை மிளகாயின் விலை யாது? ................................

20) கனவுருவில் காணப்படும் தளவடிவம் யாது?

...........................................

விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# பத்திரிகைக்கு பேட்டி காணுதல்

அரசியல் பிரமுகர்கள், கலைஞர்கள், சாதனையாளர்கள், பிரபலங்கள், சமுதாய முக்கியஸ்தர்கள் என பல ரகத்தினர் பத்திரிகையாளர்களால் பேட்டி காணப்படுவதுண்டு. பேட்டி காண்பதற்கு முன்னர், நாம் யாரைப் பேட்டி காணுகின்றோம், அவரது பின்னணி என்ன? எதற்காக அவரை பேட்டி காணுகின்றோம் போன்ற விபரங்களை நன்றாக தெரிந்துகொள்ள வேண்டும். அல்லது குறித்த நபரைப் பற்றி அறியக்கூடிய வேறு வழிகள் இருப்பினும் அந்த வழியிலும் அவரைப் பற்றி அறிந்துகொள்ளலாம். ஏனென்றால், யாரை நாம் பேட்டி காணுகின்றோமோ, அவரைப் பற்றி நாம் நன்றாக தெரிந்துவைத்திருந்தால் மாத்திரமே பயனுள்ள வகையில் குறித்த பேட்டியினை அமைத்துக்கொள்ள முடியும்.

## கேள்வி தயாரித்தல்

பேட்டி வழங்குபவரிடம் கேட்கவேண்டிய கேள்விகளை முன்கூட்டியே தயார்படுத்திக் கொண்டு, அவற்றை வரிசைக் கிரமமாக எழுதி தயார்படுத்திக்கொள்ள வேண்டும். பேட்டி காணும்போது, கிடைக்கப் பெறுகின்ற பதில்களைப் பொறுத்து அதனையொட்டிய மேலதிக கேள்விகளையும் கேட்கலாம்.

## புரிந்துணர்வு

பேட்டி காணும்போது பேட்டி காண்பவருக்கும், பேட்டி வழங்குபவருக்கும் இடையே நல்லதோர் புரிந்துணர்வை பேணுதல் வேண்டும். பேட்டி காண்பவரது கேள்விகள் எந்தவகையிலும் பேட்டி வழங்குபவரை மட்டம் தட்டுவதாகவோ, இக்கட்டுக்கு அவரை ஆளாக்குவதாகவோ இருத்தல் கூடாது.

மேலும், பேட்டி காண்பவர் தனது மேதாவிலாசத்தை காட்டுமாப்போல் நடந்துகொள்ளவும் கூடாது. பேட்டி வழங்குபவரின் மனநிலைக்கு இறங்கி வந்து அவருடன் சினேகபூர்வமாக கேள்விகளைக் கேட்டு பதில்களைப் பெறவேண்டும். சில சந்தர்ப்பங்களில் பேட்டி வழங்குபவர்கள் விளக்கமான பதிலைக் கொடுக்கத் தயங்குவதுண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சமயோசிதமாக அவர்களுடன் பேசி விளக்கமான அல்லது தெளிவான பதிலைப் பெற வேண்டும். மேலும் சில சந்தர்ப்பங்களில் குறித்த சில கேள்விகளுக்கு பேட்டி வழங்குபவர் பதில் வழங்க விருப்பமில்லாதவராக அல்லது அந்த கேள்வியை விரும்பாதவராக இருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் அவரை அதற்குப் பதிலளிக்குமாறு கட்டாயப்படுத்தல் கூடாது.





## கேள்வி கேட்கும் விதம்

கேள்விகளைக் கேட்கும் போது பேட்டி வழங்குபவருக்கு புரியும் விதமாக தெளிவாக இருக்கும் விதமாக கேட்க வேண்டும். குழப்பும் விதமாக கேள்வி இருக்கக்கூடாது. சில சந்தர்ப்பங்களில் பேட்டி வழங்குபவருக்கு தான் சார்ந்த விடயத்தில் எதைக் கூறுவது எப்படி கூறுவது என்று தெரியாமல் இருக்கலாம். ஆனால், பேட்டி காண்பவர் கேட்கும் கேள்விகளின் மூலம் அவ்வாறான பல விடயங்களையும் வெளிக்கொணரச் செய்து அவற்றை அவர் கூறுவதன்மூலம் அதையிட்டு அவர் பூரண திருப்தியை அடையலாம். பேட்டி காண்பவரின் வெற்றியும் அதில்தான் தங்கியுள்ளது.




## முழுமைப்படுத்தல்

பேட்டிகளை முழுமைப் படுத்தி செம்மைப்படுத்துகையில் கேள்விகளை சுருக்கமாக அமைப்பதுடன், பேட்டி வழங்குபவரின் பதிலுக்கு கூடிய இடங்களை வழங்குபவதாகவும் இருக்கவேண்டும். அநாவசியமான பகுதிகளை நீக்கலாம். அதேவேளை, எந்தவொரு வகையிலும் பேட்டியை மெருகூட்டல் எனும் பெயரில் பேட்டி வழங்கியவர் கூறாதவற்றை கூறியதாக குறிப்பிடுவதும் அல்லது கூறிய ஒரு விடயத்தினை அர்த்தம் மாறும் விதமாக திரித்து அமைப்பதும் மிகவும் தவறான விடயமாகும்.

(தொடரும்)

-ரிஷபன்



வெல்லுங்கள்!

விஜய் - TOP News இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!



பிரதி புதன்கிழமைகளில் 'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை இவ்வார 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

*26.11.2014* TOP News கேள்விக்கான விடை:
லண்டன்

Pen Drive வெற்றியாளர்:
கே.ஷண்முகி,
320, இன்னர் ஹாபர் வீதி,
திருகோணமலை.

அனுப்பவேண்டிய முகவரி:

Pen Drive
(10.12.2014)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'TOP News' SMS செயற்படுத்தும் முறை:




இச்சேவையின் ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்பதோடு வேலைவாய்ப்பு ALERT களையும் பெறமுடியும்.

இவ்வார கூப்பன்:
10.12.2014

விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..............................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க பாடசாலைகளின் கல்விமுறை

இக்காலகட்டத்தில் கத்தோலிக்க, பௌத்த, இந்து சமயங்களுக்கு சொந்தமான பாடசாலைகள் ஆரம்பமாகியிருந்தன. எனினும், அரசின் உதவி புரட்டஸ்தாந்து சமயத்திற்கு சொந்தமான பாடசாலைகளுக்கு மாத்திரமே கிடைத்தது. அதனால், அப்பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் மிகவும் முன்னேற்றகரமாக இருந்தது. கி.பி 1801 இல் கத்தோலிக்க பாடசாலைகள் பல ஆரம்பிக்கப்பட்டிருந்தன. கி.பி 1831 இல் கத்தோலிக்க பாடசாலைகளின் எண்ணிக்கை 63 ஆக அதிகரித்தது.

இலங்கையில் சமயப் போதனைகளில் ஈடுபட்ட போர்த்துக்கேய குடியேற்றவாசிகளாகிய தென் இந்திய கொங்கனி பிராமண கத்தோலிக்க குருமார்களுக்கு அரச உதவி கிடைக்காததால், அவர்களால் ஆங்கிலப் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியவில்லை. சகல கிறிஸ்தவ சபைப் பிரிவுகளையும் விடவும் மக்கள் தொகையில் மிக அதிகமாக இருந்த கத்தோலிக்கர்களுக்கு அரச உத்தியோகங்களில் இணைவதற்கு தேவையான ஆங்கில அறிவு கிடைக்கவில்லை. கி.பி 1826 க்குப் பின் இதனை அதிகமாக உணரக்கூடியதாக இருந்தது.

ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு கிராமத் தலைவர் பதவி வழங்க வேண்டாம் என கட்டளை பிறப்பித்தது இந்த வருடமே. சுதேசமொழி பாடசாலைகளை மாத்திரம் ஆரம்பித்த இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் இதுவே நடந்தது. அத்துடன் அக்காலகட்டத்தில் இருந்த கிறிஸ்தவ பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளின் சரியான தொகையை உறுதிப்படுத்தும் முறையொன்றும் இருக்கவில்லை.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2014, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



**பெயர்:** அப்துர் ரஹீம்.
**புள்ளிகள்:** 160.
**பாடசாலை:** வெலிகம முஸ்லிம் .ஆ.பாட.,
**பெற்றோர்:** எம்.றிஸ்வி- எஃப்.றியாஹா.



**பெயர்:** எஃப்.றிஃப்தா.
**புள்ளிகள்:** 160.
**பாடசாலை:** வெலிகம முஸ்லிம் .ஆ.பாட.,
**பெற்றோர்:** எம்.றின்ஸான்- எஸ்.நவாஸியா.



**பெயர்:** எஃப்.ஜெமியா.
**புள்ளிகள்:** 161.
**பாடசாலை:** மட்/மம/ பிர்தௌஸ் வித்.,



**பெயர்:** நித்திகா மனோகரன்.
**புள்ளிகள்:** 168.
**பாடசாலை:** யா/டிறிபேக் கல்லூரி.



**பெயர்:** எஃப்.நஸ்ஹா.
**புள்ளிகள்:** 169.
**பாடசாலை:** சிலா/நஸ்ரியா மத்திய கல்லூரி.



**பெயர்:** எம்.றியாஜ்.
**புள்ளிகள்:** 178.
**பாடசாலை:** ப/அல்-இல்மா மு. வித்.,



**பெயர்:** எஸ்.சுமையா.
**புள்ளிகள்:** 170.
**பாடசாலை:** ப/அல்-இல்மா மு. வித்.,



**பெயர்:** எஃப்.அஸ்பா.
**புள்ளிகள்:** 168.
**பாடசாலை:** ப/அல்-இல்மா மு. வித்.,



**பெயர்:** ஆர்.நிலுக்சன்.
**புள்ளிகள்:** 170.
**பாடசாலை:** கே/தெஹி/ சப்புமல்கந்த த.ம.வித்.,
**பெற்றோர்:** எஸ்.ரவிச்சந்திரன்- எம்.ஜீவராணி.



**பெயர்:** சு.மதுஷன்.
**புள்ளிகள்:** 168.
**பாடசாலை:** நு/நம்மாதா பாடசாலை.
**பெற்றோர்:** சுரேஸ்மணியம்- கவிதா.



**பெயர்:** ஃபாதி அஹமட்.
**புள்ளிகள்:** 163.
**பாடசாலை:** பு/கடையா மோட்டை மு.ம.வித்.,



**பெயர்:** ஜெ.கஜானன்.
**புள்ளிகள்:** 170.
**பாடசாலை:** வ/வவுனியா தமிழ் ம.ம.வித்.,
**பெற்றோர்:** ஜெனானந்தசிவம்- தட்சாயினி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுத்திரங்களினால் நாம் பெறும் பயன்கள்



நாம் வாழும் பூமியில், மூன்றில் இரண்டு பங்கு கடலாலும் சமுத்திரங்களினாலும் சூழப்பட்டுள்ளது. பண்டைய காலம் முதல் மனிதன் கடல் மற்றும் சமுத்திர வளங்களைப் பயன்படுத்தி வந்துள்ளான். உலகின் மிகச் சிறந்த இயற்கை வளங்களைக்கொண்டுள்ள ஓர் இடமாகத் திகழும் சமுத்திரங்களிலிருந்து வருடாந்தம் 200 பில்லியன் பவுண்கள் பெறுமதியான மீன் வளத்தினை மனிதன் பெற்றுக்கொள்கின்றான். இது தவிர; மசகு எண்ணெய், இயற்கை வாயு, கனிய மணல், பல்வேறு கனிமங்கள், எரிசக்தி ஆகியனவும் சமுத்திரங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆகவே, பூமியில் மனிதன் வாழ்வதற்கு ஏற்ற சூழலை கட்டியெழுப்புவதில் சமுத்திரங்களின் பங்களிப்பும் பிரதானமாகும்.

## உலகை சூழவுள்ள சமுத்திரங்கள்


இற்றைக்கு பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமி குளிர்வடைந்தபோது, சமுத்திரங்கள் உருவாகின. அந்தவகையில் உலகில் பசுபிக், அட்லாண்டிக், ஆர்க்டிக், அண்டார்க்டிக், இந்து என பிரதானமான ஐந்து சமுத்திரங்களும் கெஸ்பியன், கருங்கடல், செங்கடல், மத்தியதரைக் கடல் போன்ற பல்வேறு கடல்களும் உள்ளன. இந்த சமுத்திரங்களினால் நாம் பெறும் பயன்கள் ஏராளம்.

## மீன் வளங்கள்



சமுத்திரங்களில் பெறப்படும் வளங்களில் 'மீன்கள்' பிரதானமானவை ஆகும். உலகப் பொருளாதாரத்தில் மீன் வளங்களுக்கு முக்கிய இடம் கிடைத்துள்ளது. பண்டைய காலம் முதல் மனிதன் உவர்நீர் மீன்பிடித்தொழிலிலேயே அதிகம் ஈடுபட்டு வருமானத்தை ஈட்டியுள்ளான். உலக மக்களின் புரதத் தேவையில் 16 சதவீதம் உவர்நீர் மீன்களின் மூலமே நிறைவேற்றப்படுகின்றது. பாரம்பரிய மற்றும் நவீன முறைகளைப் பின்பற்றி, ஆழமான கடற்பிராந்தியங்களிலும் நாடுகளை அண்மித்த கடற்பிராந்தியங்களிலும் மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

இவ்வாறு பிடிக்கப்படும் மீன்களில் ஒரு பகுதி உணவுக்காக விற்பனை செய்யப்படுவதுடன், எஞ்சுபவை குளிரூட்டியில் வைக்கப்பட்டு சேமிக்கப்படுகின்றன. மற்றைய பகுதி பதப்படுத்தப்பட்டு தகரப்பேணிகளில் அடைக்கவும் மீன் சார்ந்த உணவுகளைத் தயாரிக்கவும் பயன்படுகின்றது. சில மீன் இனங்களிலிருந்து எண்ணெய் பெறப்படுகின்றது. சமுத்திரவாழ் அழகிய மீன்களில் சில, அலங்கார மீன் வளர்ப்புக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்கா, சிலி, இந்தோனேஷியா, ரஷ்யா, இந்தியா, தாய்லாந்து, நோர்வே மற்றும் ஐஸ்லாந்து என்பன உலகில் அதிகளவு மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நாடுகளாகும்.



## பண்டங்கள் - பயணிகள் போக்குவரத்து



நாடுகளுக்கு இடையிலான பண்டங்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்தில் சமுத்திர வளம் பெரும் பங்காற்றுகின்றது. பண்டங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கான சிறந்த நீர்ப்போக்குவரத்துப் பாதை சமுத்திரங்களூடாகவே அமைந்துள்ளன. பண்டங்களை ஏற்றி-இறக்கும் கப்பல்கள், தாங்கிகள், எண்ணெய் ஏற்றும் கப்பல்கள், ரசாயன கப்பல்கள், மசகு எண்ணெய் கப்பல்கள், மோட்டார் வாகனங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் ஆகியவை இவற்றுள் பிரதான இடத்தினை வகிக்கின்றன. குறைந்தளவு சுற்றாடல் மாசுடன், மிகவும் லாபகரமான வழியில் பண்டங்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்துக்கு உதவும் மார்க்கமாக சமுத்திரசார் போக்குவரத்தினைக் குறிப்பிடலாம். எனினும், கப்பல்களில் ஏற்படும் எண்ணெய்க் கசிவு, ரசாயனப் பதார்த்தங்களின் கசிவு என்பவை காரணமாக, சமுத்திரங்கள் மாசடைவுக்குள்ளாகி வருகின்றன.

## கனிம வளங்கள்

சமுத்திரங்களில் கனிம வளங்கள் பெருமளவில் உள்ளன. இவற்றுள் உலோக வளங்கள் பெருமளவில் அடங்கும். அத்துடன், வைரக்கற்கள், தங்கம், வெள்ளி, வெண்கலம், கொபோல்ட் ஆகிய உலோகங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். எனினும், அதற்காக, அதிகளவு மூலதனம் தேவை என்பதால், பெரும்பாலான நாடுகள் சமுத்திர கனிம அகழ்வுப் பணிகளில் பெரிதளவு ஆர்வம் காட்டுவதில்லை.







## கனிய மணல்

கனிய மணல் வளங்கள் பெரும்பாலும் கரையோரங்களை அண்டிய பகுதிகளில் கிடைக்கும். இலங்கையின் புல்மோட்டைப் பகுதியில் இந்த கனிய மணல் வளத்தினைக் காண முடியும். இல்மனைற், டைட்டேனியம், ரூடைல், சர்கோன், மொனோசைட், கானட் ஆகிய கனிய மணல் வகைகளை சமுத்திரங்களை அண்டிய கரையோரங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# னால்
# ன்கள்



### உப்பு

உவர்நீரில் கலந்துள்ள சோடியமும் க்ளோரைட்டும் திண்மநிலையை அடையும்போது உப்பாக மாறுகின்றது. உப்பு உற்பத்தியின்போது, உவர்நீரானது, உப்பளங்களில் தேக்கிவைக்கப்பட்டு சூரிய ஒளியினால் நீராவியடையச் செய்யப் படுகின்றது.இதன்போது உவர்நீரில் கரைந்துள்ள மெக்னீசியமும் கல்சியமும் உறிஞ்சிக்கொள்ளப்படுவ தன்மூலம் அகற்றப்படுகின்றன. உப்பளங்களில் விளைவிக்கப்படும் உப்பானது, உணவுத் தயாரிப்புக்கும் அழகுசாதனப் பொருட்கள் உற்பத்திக்கும் பயன்படுத்தப்படுகின்றது.



### அலைச்சக்தி

சமுத்திரங்களில் உருவாகும் அலைச்சக்தியினைப் பயன்படுத்தி மின்சாரத்தினை உற்பத்தி செய்ய முடியும். மசகு எண்ணெய் வளம் அருகி வருவதனாலும், சுற்றாடலுக்கு ஏற்புடைய எரிசக்தி பாவனை குறித்து உலக நாடுகள் கவனம் செலுத்தி வருவதனாலும், அவற்றுக்கான சிறந்த தீர்வாக அலைச்சக்தி உற்பத்தி அமைந்துள்ளது. நிலப்பகுதிகளில் அமைக்கப்படும் எரிசக்தி நிலையங்களைவிட, இதனை நிர்மாணிப்பதன்மூலம் அதிகளவு மூலதனச் செலவு ஏற்பட்டாலும், நீண்டகால அடிப்படையில் அலைச்சக்தியினைப் பயன்படுத்தி மின்சாரத்தினை உற்பத்தி செய்வது இலாபகரமானதாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சமுத்திரங்களில் உருவாகும் அலைச்சக்தியினால் டர்பைன் இயந்திரங்களை இயக்கச் செய்து, அந்த டர்பைன்களினூடாக மின்சாரம் உற்பத்தியாகின்றது.

### கள்

...பரிய மற்றும் நவீன முறை
...யங்களிலும் நாடுகளை
...ள் பிடிக்கப்படுகின்றன.
... பகுதி ... ணவுக்காக
...வை கு...ிருட்டியில் வைக்கப்
...தி பதப்படுத்தப்பட்டு
...ந்த உணவுகளைத்
...இனங்களிலிருந்து
...ாழ் அழகிய மீன்களில் சில,
...டுத்தப்படுகின்றன. ஐக்கிய
...ா, இந்தியா, தாய்லாந்து,
...கில் அதிகளவு மீன்பிடி
...ளாகும்.

### சுற்றுலாத்துறை

உலகப் பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறை முக்கிய இடத்தினை வகிக்கின்றது. அந்தவகையில், சுற்றுலாத்துறைக்கும் சமுத்திரங்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. மேலும் கடற்கரையின் அழகு, டொல்ஃபின் போன்ற கடல்வாழ் உயிரினங்களை ரசித்தல், நீந்துதல், படகு சவாரி என்பன சுற்றுலாத்துறையில் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. மேலும், கண்டல் தாவர சுற்றாடலைக் கண்டு களிப்பதற்கும் பவளப்பாறைகளை ரசிக்கவும் சுற்றுலாப்பயணிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.





### மசகு எண்ணெய்யும் இயற்கை வாயுவும்

உலகில் தற்போதுள்ள எண்ணெய் வளம் மிக்க பகுதிகள் பெரும்பாலும் சமுத்திரங்களை அண்டியதாகவே உள்ளன. ஆழமான கடல் பரப்பினுள் அமைக்கப்படும் எண்ணெய்க் கிணறுகளில் இருந்து பெறப்படும் மசகு எண்ணெய், குழாய்கள்மூலம் எண்ணெய் கப்பல்களுக்கு அனுப்பப்பட்டு, பின்னர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்கப்படுகின்றது. சிலவேளைகளில் மசகு எண்ணெய்யுடன் கலந்து இயற்கை வாயுவும் காணப்படும்.



### இயற்கைச் சக்கரம் சுழல்வதற்கு...

நாளாந்தம் சமுத்திரங்களில் இருந்து பெருமளவு நீர் ஆவியாகி வளிமண்டலத்தினை சென்றடைகின்றது. இதனால், நிலப்பகுதிக்கு மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. இயற்கையின் நீர்ச்சக்கர செயற்பாட்டிற்கு சமுத்திரங்கள் பெரும் பங்காற்றுகின்றன. அத்துடன், காபன் மற்றும் நைதரசன் செயற்பாட்டிற்கும் சமுத்திரங்கள் முக்கிய பங்காற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

...வற்றுள்
...கள், தங்கம்,
...ம் பெற்றுக்
...தேவை
... பணிகளில்



...ுண்டிய
...யில் இந்த
...டேனியம்,
...ல் வகைகளை
...காள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிறந்த உயிரின வாழ்க்கையும் உயிர்ப்பல்வகைமைத்துவமும்

உலகின் முதலாவது உயிரினம் சமுத்திரத்திலேயே உருவாகியதாகக் கூறப்படுகின்றது. அன்றுமுதல் இன்றுவரை பல உயிரினங்களுக்கு சமுத்திரங்கள் வாழ்விடமாக இருந்து வருகின்றன. சமுத்திர சூழலில் பெருமளவு உயிர்ப்பல்வகைமைத்துவமும் காணப்படுகின்றது. பவளப்பாறைகள், சமுத்திர வனாந்தரங்கள் ஆகியவை சமுத்திர சுற்றாடலில் உயிர்ப்பல்வகைமைத்துவத்தை அதிகரிப்பதில் பங்காற்றுகின்றன.



### மணல்


சமுத்திரத்திலிருந்து பெறப்படும் மணல், மற்றுமொரு கனிய வளமாகும். தற்போது பல்வேறு நாடுகளும் நிர்மாணப் பணிகளுக்காக பெரும்பாலும் சமுத்திர மணலையே பயன்படுத்துகின்றன. இலங்கையிலும் கட்டட நிர்மாணப்பணிகளுக்கு சமுத்திர மணல் பயன்படுத்தப் படுகின்றது.

### உலகின் மிகப்பெரிய உணவுற்பத்தி நிலையம்

உலகின் மிகப்பெரிய உணவு உற்பத்தி நிலையமாகவும் ஒட்சிசன் தயாரிப்பு நிலையமாகவும் சமுத்திரங்கள் உள்ளன. சமுத்திரவாழ் அலைதாவரங்களான(Phytoplankton) டெஸ்மிட் மற்றும் டயடம் என்பன ஒளித்தொகுப்பின்மூலம் உணவு தயாரிக்கின்றன. இவற்றின்மூலம் சமுத்திரங்களிலும் நிலப்பகுதிகளிலும் பல உணவுச் சங்கிலிகள் ஆரம்பிக்கின்றன. அலைதாவரங்கள் வளிமண்டலத்தில் உள்ள காபனீரொட்சைட்டினைப் பயன்படுத்தி உணவுத் தயாரிப்பில் ஈடுபடுகின்றன. இதன்போது ஒட்சிசன் வாயு வளிமண்டலத்துக்கு வெளியிடப்படுகின்றது. இதன் அடிப்படையில் வளிமண்டலத்தில் காணப்படும் ஒட்சிசன் மற்றும் காபனீரொட்சைட் வாயு மட்டங்களின் சமநிலைத் தன்மையை பேணுவதற்கு அலைதாவரங்களும் உதவுகின்றன.

-பிரியா

# 'புளூட்டோ' மீண்டும் கிரக அந்தஸ்தைப் பெறுமா?



புளூட்டோவில் ஆய்வுக்காக செல்லும் நியூ ஹொரைசன் விண்கலம்

முன்னர் எமது ஞாயிற்றுத்தொகுதிக்குட்பட்ட தொரு கிரகமாக கருதப்பட்டு வந்த 'புளூட்டோ' (Pluto) 2006 ஆம் ஆண்டு முதல் 'கிரகம்' என்கின்ற அந்தஸ்திலிருந்து நீக்கப்பட்டு, ஒரு குறுங்கிரகமாக (dwarf planet) அடையாளப்படுத்தப்பட்டது. சர்வதேச வானியல் விஞ்ஞான அமைப்பே இந்த தீர்மானத்தை எடுத்திருந்தது. புளூட்டோ ஒரு குறுங்கிரகம் என தீர்மானிப்பதற்கு முக்கியமானதொரு விடயம் காரணமாக இருந்தது. அதாவது, எமது ஞாயிற்றுத் தொகுதியின் ஏனைய கிரகங்கள் நீள்வட்டப் பாதையில் சூரியனைச் சுற்றி வரும் முறையினைப் போலல்லாது, புளூட்டோ சூரியனைச் சுற்றி வரும் முறையானது, அதற்கே உரித்தான மாறுபட்டதொரு விதத்தில் அமைந்திருந்தமையே இதற்கு காரணமாகும். எனினும், தற்போதளவில் மீண்டும் ஞாயிற்றுத்தொகுதியின் ஒரு கிரகமாக புளூட்டோவை அங்கீகரிப்பது குறித்த விவாதம் ஆரம்பமாகியுள்ளது.




## வாக்கெடுப்பு

இந்த தீர்மானம் சம்பந்தமாக ஆதரவாகவும் எதிராகவும் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வானியல்துறைசார் நிபுணர்கள் பலரும் இது தொடர்பில் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர். எனினும், புளூட்டோவுக்கு மீண்டும் கிரக அந்தஸ்து வழங்குவது குறித்து இதுவரை உறுதியான தீர்மானத்திற்கு வரவில்லை என்றே கூறப்படுகின்றது. ஆனால், புளூட்டோ மீண்டும் ஒரு கிரகமாக அங்கீகரிக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது என்று பிரித்தானியாவின் டெய்லிமெயில் பத்திரிகையின் இணையத்தளம் தெரிவிக்கின்றது.

புளூட்டோ ஒரு கிரகமா?, இல்லையா? என்பது தொடர்பான விவாதம் அமெரிக்காவின் மசாச்சுசெட்ஸ் மாநிலத்தில் அமைந்துள்ள வானறிவியல் துறைக்கான ஹாவர்ட்-ஸ்மித்சோனியன் மத்தியநிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த விவாதத்தில் கலந்தகொண்ட வானியல்துறைசார் விசேட நிபுணர்கள், புளூட்டோ ஒரு கிரகமா?, இல்லையா? என்பது குறித்து தத்தமது கருத்துக்களை முன்வைத்ததோடு, இக்கருத்துக்கள் தொடர்பில் சபையோரிடையே வாக்கெடுப்பொன்றும் நடைபெற்றது.



புளூட்டோவுக்கு மீண்டும் கிரக அந்தஸ்து வழங்குவது [illegible] வாக்கெடுப்பின்போது...

## கிரக அந்தஸ்தைப் பெறுவதற்கான மூன்று முக்கிய நிபந்தனைகள்

[illegible] விஞ்ஞான [illegible] மைய, விண்வெளி வஸ்துவொன்று கிரகமாக கணிக்கப்படுவதற்கு மூன்று அடிப்படை நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளது. அவையாவன:

* குறித்த விண்வெளி வஸ்து சூரியனை சுற்றிவருவதாக இருக்க வேண்டும். தவிர எந்தவொரு கிரகத்தினதும் துணைக்கோளாக இருக்கக் கூடாது.
* தனித்துவமான ஈர்ப்புச்சக்தி அதற்கு இருக்க வேண்டும் என்பதோடு, அது கோள வடிவத்தைப் பெறுவதற்குப் போதுமான திணிவினையும் கொண்டிருக்க வேண்டும்.
* அடுத்ததாக, ஏனைய கிரகங்கள் சூரியனை சுற்றி வருவதைப் போன்ற சுழற்சி அமைப்பை (குறித்த விண்வெளி வஸ்து) கொண்டிருக்க வேண்டும். ஆனால், புளூட்டோவின் சுழற்சி முறையை அவதானிக்கும் போது, அது இந்த நிபந்தனைக்கு மாத்திரம் உட்படவில்லை என்றே தெரிவிக்கப்படுகின்றது. அதாவது, ஞாயிற்றுத்தொகுதியின் ஏனைய கிரகங்கள் நீள்வட்டப் பாதையில் சூரியனைச் சுற்றி வருகின்ற நிலையில், புளூட்டோ சுற்றி வரும் முறை அவற்றுக்கு மாற்றமாக இருப்பதாகவும், அது சூரியனைச் சுற்றி வரும் போது ஏனைய கிரகங்களைப் போலல்லாது ஞாயிற்றுத்தொகுதியின் வெளிப்புறமாக அமைந்துள்ள குய்ப்பர் வளையம் வரை பயணிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குய்ப்பர் வளையப்பகுதியில் வேறுபல விண்வெளி வஸ்துக்களும் அமைந்துள்ளன. இந்த காரணத்தை அடிப்படையாகக் கொண்டே புளூட்டோ ஒரு கிரகமன்று எனவும் அது ஒரு குறுங்கிரகம் எனவும் 2006 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.



1930 ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதி, அமெரிக்க வானியலாளரான க்ளைட் டொம்பா என்பவரால் புளூட்டோ கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**இரஞ்சித் ஜெயகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டை வளப்படுத்தியவாறே கடலுடன் சங்கமிக்கும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

# எமது நாட்டின் நதிகள்

### மஹா ஓயா



**தோற்றம்:** கேகாலை, அரணாயக்க, தொலஸ்பாகே ஆகிய பகுதிகளின் மலைகளில் ஊற்றெடுக்கின்றது.

**நீளம்:** 134 கி.மீ.

**சங்கமம்:** நீர்கொழும்பு, கொச்சிக்கடை பகுதிகளில் கடலுடன் சங்கமிக்கின்றது.

மகா ஓயாவைச் சார்ந்து பல தொழிற்துறைகள் காணப்படுகின்றன. ஆற்றின் மேற்குக் கரைப்பகுதியில் நெல், தேங்காய், இறப்பர் மற்றும் காய்கறிப் பயிர்ச்செய்கை என்பன மேற்கொள்ளப்படுகின்றன. கீழ்ப்பகுதியில் மண் அகழ்வும், ஓடுகள் உற்பத்தியும் மேற்கொள்ளப்படுகின்றன. தெற்கு முக்கோணப்பகுதியில் மஹாஓயா பாய்ந்து ஓடுவதுடன், அசுபினி நீர்வீழ்ச்சியினையும் உற்பத்தி செய்கின்றது.

### பெந்தர ஆறு

**தோற்றம்:** சிங்கராஜ மலைப்பகுதி மற்றும் சப்ரகமுவ மலைப்பகுதியினூடாக வரும் நீர்வீழ்ச்சிகளினால் போஷிக்கப்படுகின்றது.

**நீளம்:** 73 கி.மீ.

**சங்கமம்:** பெந்தோட்டப் பகுதியின் கடலில் சங்கமிக்கின்றது.

தென் மாகாணத்தினையும் மேல் மாகாணத்தினையும் பிரிக்கும் எல்லையாக பெந்தர ஆறு விளங்குகின்றது. ஆற்றின் இரு கரைப்பகுதிகளிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதுடன், நீர் செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. இவை அனைத்தையும் தவிர பெந்தர ஆற்றினை சூழவுள்ள பகுதிகள் சுற்றுலாப்பயணிகளைக் கவரும் இடங்களாகவும் உள்ளன.



### கிரிந்தி ஓயா



**தோற்றம்:** பண்டாரவளை நகருக்கு அருகே உள்ள மலைப்பகுதியில் ஆரம்பமாகின்றது.

**நீளம்:** 117 கி.மீ.

**சங்கமம்:** கிரிந்த பகுதியில் கடலுடன் சங்கமிக்கின்றது.

கிரிந்தி ஓயா நீரின் உதவியுடன் யோதகண்டிய, திஸ்ஸ, வீரவில, ஹந்தபானகல, பிட்டாரம ஆகிய வாவிகள் வளமடைகின்றன. பெருமளவான பகுதிகளுக்கு நீர் விநியோகிக்கப்படுகின்றபோதிலும் இந்த ஆற்றில் இருந்து குறைந்தளவான நீரே கடலுடன் சங்கமிக்கின்றது. லுணுகம்வெஹெர அபிவிருத்தித் திட்டம் கிரிந்தி ஓயா சார்ந்தே மேற்கொள்ளப்படுகின்றது.

### தெதுறு ஓயா

**தோற்றம்:** மாத்தளை, குருணாகலை, யாப்பஹுவா ஆகிய மலைசார்ந்த பகுதிகளிலிருந்து சிறுநீரோடைகள் இணைந்து உருவாகியுள்ளது.

**நீளம்:** 142 கி.மீ.

**சங்கமம்:** சிலாபத்திற்கு அண்மையிலுள்ள கடலில் சங்கமிக்கின்றது.

சிறிய நீர்வீழ்ச்சிகள் இணைந்து உருவாகின்ற தெதுறு ஓயா ஆறுடன் பல கிளை ஆறுகள் இடையில் இணைகின்றன. இந்த ஆறு மெதுவாகப் பாய்ந்து செல்வதனால், மண் அகழ்வுப் பணிகள் பரவலாக மேற்கொள்ளப்படுகின்றன. தெதுறு ஓயா நீரினைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



### கும்புக்கன் ஓயா



**தோற்றம்:** பதுளை மாவட்டத்தின் பசறையிலுள்ள மலைகளில் ஆரம்பிக்கின்றது.

**நீளம்:** 116 கி.மீ.

**சங்கமம்:** இலங்கையின் தென்கிழக்குப்பகுதியில் உள்ள பிரதான ஆறு கும்புக்கன் ஓயாவாகும்.

இது கிழக்கு மாகாணத்தினையும் தென் மாகாணத்தினையும் பிரிக்கும் எல்லையாகும். கிளை ஆறுகள் பலவற்றிலிருந்து பாய்ந்துவரும் நீரிலிருந்து கும்புக்கன் ஓயா வளமடைகின்றது.

### அம்பன் கங்கை

**தோற்றம்:** மாத்தளை நாலந்த பிரதேச மலை சார்ந்து உருவாகின்றது.

**நீளம்:** 100 கி.மீ.

**சங்கமம்:** மகாவலி கங்கை, அம்பன் கங்கை, மகாவலி ஆற்றின் கிளை ஆறாகும்.

நாலந்த மலைப்பகுதியில் ஆரம்பமாகும் இந்த ஆறு மன்னம்பிட்டியவில் மகாவலி கங்கையுடன் இணைகின்றது. அம்பன் கங்கை பயணிக்கும் பாதையானது, வளைவுகள் கொண்டமைவதால் மணல் தீவுகள் பல உருவாகின்றன. சுற்றுப்புறப்பகுதிகளில் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மின்னேரியா வாவியும் பராக்கிரம சமுத்திரமும் இந்த ஆற்றின் ஊடாக நீரினைப் பெறுகின்றன. மேலும் போவதென்ன நீர்த்தேக்கம், மொரகஹாகந்த நீர்த்தேக்கம், கிரித்தலவாவி, எலஹெர அமுன ஆகியவற்றுக்கும் இந்த ஆற்றினூடாகவே நீர் கிடைக்கின்றது.



### மாதுறு ஓயா



**தோற்றம்:** ஊவா மற்றும் வஸ்கமுவ பகுதி மலைப்பகுதிகளின் சிறிய நீர்வீழ்ச்சிகளிலிருந்து ஆரம்பிக்கின்றது.

**நீளம்:** 135 கி.மீ.

**சங்கமம்:** மட்டக்களப்பு கடலில் சங்கமிக்கின்றது.

மண்டு ஆறு மற்றும் மந்தூர் ஆறு என்று இரண்டு கிளைகளாகப் பிரிகின்ற மாதுறு ஓயா, உல்ஹிட்டிய நீர்த்தேக்கம், ரத்கிந்த நீர்த்தேக்கம், தம்பராவ வாவி, சொரபொர வாவி, வாகனேரி வாவி ஆகிய பல நீர்த்தேக்கங்களினால் வளப்படுத்தப்படுகின்றது. இந்த ஆற்றின் கரைப்பகுதிகளில் விவசாயம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றது.

### கல் ஓயா

**தோற்றம்:** பிபிலே பகுதியின் மலைகள் சார்ந்து உருவாகின்றது.

**நீளம்:** 108 கி.மீ.

**சங்கமம்:** பண்டைகால வரலாறுகளின்படி, இந்த கல் ஓயா பயிர்ச்செய்கை நிலப்பரப்பாக இருந்துள்ளது.

பின்னர் சூனியப் பிரதேசமாகி மீண்டும் மக்கள் சூழ்ந்து வாழும் பிரதேசமாக அது மாறியது. சேனாநாயக்க சமுத்திரம், ஜயந்திவாவி, இங்கினியாகல நீர்த்தேக்கம் ஆகியன மறுசீரமைக்கப்பட்ட பின்னர் ஆறாகப் போஷிக்கப்படுகின்றது.



### ஹெட ஓயா



**தோற்றம்:** மொனராகலைப் பகுதியின் மலைகளில் உற்பத்தியாகின்றது.

**நீளம்:** 88 கி.மீ.

**சங்கமம்:** பானம மற்றும் பொத்துவில் நகரங்களினூடாக இரு கிளைகளாகப் பிரிந்து கடலில் சங்கமிக்கின்றது.

பண்டைய காலத்தில் இந்த ஆற்றின் பள்ளத்தாக்குப் பகுதியினையே திகாமடுல்ல என்று அழைத்தனர். அன்று இந்த ஆற்றுடன் தொடர்புபட்ட நீர்ப்பாசன நீர்த்தேக்கம் ஒன்று இருந்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. ஹெட ஓயா நீர்த்தேக்கமும் இந்த ஆற்றுநீரினால் வளம் பெறுகின்றது.

-பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மாலாவுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**මාලා:** **අම්මේ, හොඳටම වහිනව නේද?**
அம்மே, ஹொந்தட்டம வஹினவ நேத?
மாலா: **அம்மா, நன்றாக மழை பெய்கிறது அல்லவா?**

**අම්මා:** **ඔව් දුව, රෑ ඉඳලම වහිනවා.**
ஒவ் துவ, ரே இந்தலம வஹினவா.
அம்மா: **ஆம் மகள், இரவிலிருந்தே பெய்கிறது.**

**මාලා:** **මම ඉස්කෝල යන්නෙ කොහොමද අම්මේ?**
மம இஸ்கோல யன்னே கொஹொமத அம்மே?
மாலா: **நான் எப்படி பாடசாலை போவது அம்மா?**

**අම්මා:** **ඇයි ඔයාගේ කුඩය කෝ?**
எய் ஒயாகே குடய கோ?
அம்மா: **ஏன் உங்களுடைய குடை எங்கே?**

**මාලා:** **මගේ කුඩය කැඩිල අම්මේ.**
மகே குடய கெடில அம்மே.
மாலா: **என்னுடைய குடை உடைந்துவிட்டது அம்மா.**

**අම්මා:** **ඒක අලුත් එකක් නේද?**
ஏக அலுத் எகக் நேத?
அம்மா: **அது புதியதொன்று தானே?**

**මාලා:** **ඔව් අම්මේ, ඒ වුනාට ඒ කුඩය හරි නැහැ.**
ஒவ் அம்மே, ஏ வுனாட்ட ஏ குடய ஹரி நெஹெ.
மாலா: **ஆம் அம்மா, என்றாலும் அந்த குடை நல்லது இல்லை.**

**අම්මේ, අක්කා වැඩට ගියාද?**
அம்மே, அக்கா வெடட்ட கியாத?
**அம்மா, அக்கா வேலைக்குப் போய்விட்டாளா?**

**අම්මා:** **ඔව්. අක්කා ගියා. ඇයි?**
ஒவ். அக்கா கியா. எய்?
அம்மா: **ஆம். அக்கா போய்விட்டாள். ஏன்?**

**මාලා:** **නැහැ, එයා ගාව කුඩ දෙකක් තියෙනවනේ. එකක් ගන්න.**
நெஹெ, எயா காவ குட தெகக் தியெனவனே. எகக் கன்ன.
மாலா: **இல்லை, அவளிடம் இரண்டு குடைகள் இருக்கின்றனதானே. ஒன்றை எடுக்கத்தான்.**

**අම්මා:** **අල්මාරියේ ඇති. හැබැයි නැති කරන්නේ නැතිව ගෙනත් තියන්න.**
அல்மாரியே எதி. ஹெபெய் நெதி கறன்னே நெதிவ கெனத் தியன்ன.
அம்மா: **அலுமாரியில் இருக்கும். ஆனால், தொலைத்துவிடாமல் கொண்டுவந்து வையுங்கள்.**

### பயிற்சி



**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. நன்றாக மழை பெய்கிறது.
.................................................

ii. உங்களுடைய குடை எங்கே?
.................................................

iii. அக்கா போய்விட்டாள்.
.................................................

iv. அலுமாரியில் இருக்கும்.
.................................................




## Affirmative Sentence - Interrogative Sentence
## உடன்பாடு வாக்கியம் - வினா வாக்கியம்

**Has to** எனும் வினைச்சொல்லுடன் ஏதாவதொரு மூல வினைச்சொல்லைக் (Stem Verb) கையாண்டு அமைக்கப்பட்ட உடன்பாடு வாக்கியங்களையும், அவற்றின் வினா வாக்கியங்களையும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) He has to meet the principal.
அவன் அதிபரை சந்திக்க வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

ஆ) Does he have to meet the principal?
அவன் அதிபரை சந்திக்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

* **இதே வினா வாக்கியத்தை வேறு விதமாகப் பின்வருமாறும் அமைக்கலாம்.**

இ) Has he got to meet the principal?
அவன் அதிபரை சந்திக்க வேண்டியுள்ளதா?

* He has to meet.
அவன் சந்திக்க வேண்டியுள்ளது.
* Does he have to meet?
அவன் சந்திக்க வேண்டியுள்ளதா?
* Has he got to meet? (Interrogative)
அவன் சந்திக்க வேண்டியுள்ளதா? (வினா)

ஈ) She has to come here tomorrow.
அவள் நாளை இங்கே வர வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

உ) Does she have to come here tomorrow?
அவள் நாளை இங்கே வர வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

ஊ) Has she got to come here tomorrow?
அவள் நாளை இங்கே வர வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

* She has to come.
அவள் வர வேண்டியுள்ளது.
* Does she have to come?
அவள் வர வேண்டியுள்ளதா?
* Has she got to come? (Interrogative)
அவள் வர வேண்டியுள்ளதா? (வினா)

எ) It has to jump over the fence.
அது வேலியின் மேலாகப் பாய வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

ஏ) Does it have to jump over the fence?
அது வேலியின் மேலாகப் பாய வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)


ஐ) Has it got to jump over the fence?
அது வேலியின் மேலாகப் பாய வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான்

பாகிஸ்தான் முன்னர் இந்தியாவுக்குச் சொந்தமான ஒரு பிரதேசமாகவே இருந்தது. சிந்துவெளி நாகரீகத்திற்கு உரிமை கொண்டாடும் பகுதிகள் மௌரியர், மொங்கோலியர், கிரேக்கர் மற்றும் முகலாயர் என பல்வேறு பேரரசுகளின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தது. இறுதியில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழ் இருந்த அப்பகுதி 1947 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது. அன்று முதல் மேற்குப் பாகிஸ்தான் என அழைக்கப்பட்டதோடு 1971 இல் நடந்த உள்நாட்டு யுத்தத்தின் பின் கிழக்குப் பகுதி பிரிந்து செல்ல பாகிஸ்தான் என பெயர்பெற்றது.




# தெரிந்து கொள்வோம்

* இலங்கையில் வெளியிடப்பட்ட 500 ரூபாய் தாள்களில் வண்ணாத்துப்பூச்சியின் படம் காணப்படுகின்றது. ஆனால், 2013 இல் வெளியிடப்பட்ட 500 ரூபாய் தாளில் வண்ணாத்துப்பூச்சிக்குப் பதிலாக வேறொரு அம்சம் இடம்பெற்றுள்ளது. அது என்ன?



CHOGM- 2013 என்ற சின்னம்



* கண்டங்கள் வாரியான குடித்தொகையில் ஆசியாக் கண்டம் (420 கோடி) முதலிடத்தைப் பெறுகின்றது. குடித்தொகையில் 2 ஆம், 3 ஆம் இடங்களைப் பெறும் கண்டங்கள் எவை?

ஆபிரிக்கா (120 கோடி), ஐரோப்பா 175 கோடி

* 2014 இல் உலக வங்கியின் தலைவர் யார்? அவர் எந்த நாட்டவர்?



தென்கொரிய நாட்டவரான ஜிம் யொங் கிம்

* ஐஃபல் கோபுரம் பிரான்சில் அமைந்துள்ளது. இது எப்போது யாரால் நிர்மாணிக்கப்பட்டது?

1889 இல் குஸ்டாவோ ஐஃபல் என்பவரால் நிர்மாணிக்கப்பட்டது

* 8888 போராட்டம் என்று அழைக்கப்படுவது எந்நாட்டின் போராட்டம்?



மியன்மாரில் ஜனநாயகத்திற்காக 1988 ஒகஸ்ட் 08 இல் ஆரம்பிக்கப்பட்ட போராட்டமாகும்

* 2014 FIFA கிண்ணப் போட்டி எங்கே நடைபெற்றது? அதில் தங்கப்பந்து விருது பெற்றவர் யார்?



பிரேசில் நாட்டில் நடைபெற்றது
லயனல் மெஸ்ஸி ஆர்ஜன்டீனா நாட்டவர்

* இலங்கை யாப்பின்படி, (1978) ஜனாதிபதியின் பதவிக்காலம் எத்தனை வருடங்கள்?

6 வருடங்கள்

* அகலவத்தை, மகா இலுப்பள்ளம ஆகிய இடங்களில் காணப்படும் விவசாய ஆராய்ச்சி நிலையங்களில் எந்தப் பயிர்கள் பற்றிய ஆய்வு நடைபெறுகின்றது?

i. இறப்பர் ii. நெல் மற்றும் கால்நடைகள்

* இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்த பெறுமதியுள்ள நாணயத்தாள் எது?

10 ரூபாய் நாணயத்தாள்

தொகுப்பு:
உடுவை பரந்தாமன்

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5919
கி.சுதர்சனா, தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.


அங். இல: 5920
தி.சுபாங்கி, கைலாயப்பிள்ளை வீதி, சாவகச்சேரி.


அங். இல: 5921
கு.மதுர்சன், ரஜமாவத்தை, இரத்மலானை.


அங். இல: 5922
கி.வினோத்குமார், நுகேன தோட்டம், எஹலியகொடை.


அங். இல: 5923
ம.தேவதர்சன், மரியார் வீதி, கல்முனை-03.


அங். இல: 5924
த.ஷயந்தினி, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.


அங். இல: 5925
எச்.எம்.றஸான், மீனோடைக்கட்டு, அட்டாளைச்சேனை-09.


அங். இல: 5926
த.தனுர்ஷன், வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.


அங். இல: 5927
எப்.எம்.சுஹைப், ஊர் வீதி, காத்தான்குடி-05.



அங். இல: 5928
த.ஷயந்தனா, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான கடல்






பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும் ரம்மியமாகவும் காட்சி தரும் கடல்களுள் அதிபயங்கரமான கடல்களும் இருக்கின்றன என்றால் அது ஆச்சரியமான விடயம் தான். கடல்கள் பார்க்க அழகாக இருந்தாலும், பயமுறுத்தும் மிகவும் முக்கியமான கடலாக ஹவாய்த் தீவிலுள்ள 'ஹனகபியய்' எனும் கடல் திகழ்கின்றது. இந்த கடலில் ஏனைய கடல்களில் இறங்குவதைப் போன்று இறங்க முடியாது. மீறி இறங்கினால் அப்படியே தன்னுள் இழுத்துக்கொள்ளும். ஏனெனில், இங்கு 'ரிப் கரன்ட்ஸ்' (Rip Currents) எனும் ஒருவித ஈர்ப்பு விசை காணப்படுகின்றது. கடலில் கால் வைத்த அடுத்த நிமிடமே ஆளை இழுத்துக் கொள்ளும் தன்மையுடையது. ஆகையால் இக்கடற்கரைப் பரப்பில் உலாவக் கூட அனுமதி இல்லை என்கின்றனர்.

எம்.ஜே.ஆயிஷா,
அல்-அக்ஷா மு.ம.வித்.,
எஹலியகொட.

# நூலகம்

நூலகம் சென்றிடுவோம்
நூல்கள் பல வாசித்திடுவோம்
நுண்ணறிவை வளர்த்திடுவோம்
அதன்படியே வாழ்ந்திடுவோம்!

இன்றைய நல்ல புத்தகங்கள்
அறிவை வளர்க்கும் புத்தகங்கள்
நூலகம் நிறைந்த புத்தகங்கள் அவற்றை
நுட்பமாக நாம் வாசித்திடுவோம்!

பூ.பவர்ஷனா,
மகாஜனக் கல்லூரி,
மட்டக்களப்பு.






# திருப்தி



முதியவர் ஒருவரின் வீட்டிற்கு முன்னால் ஒவ்வொரு நாளும் சிறுவர்கள் சிலர் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருப்பர். அது அவருக்கு மிகவும் தொல்லையாக இருந்தது. ஒருநாள் பெரியவர் அவர்களிடம் சென்று, ''நான் ஓய்வூதியம் வாங்குபவன். எனக்குப் பிடித்தமான கிரிக்கெட்டை நீங்கள் அனைவரும் விளையாடுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. நீங்கள் ஒவ்வொரு நாளும் இங்கு விளையாடினால் நான் உங்களுக்கு வாரத்திற்கு ஆயிரம் ருபாய் தருகின்றேன்'' என்றார்.

சிறுவர்களுக்கு மிகவும் ஆச்சரியம்! நாங்கள் விருப்பத்துடன் விளையாடுவதற்குப் பணமா! இதனால், மகிழ்ச்சியுடன் அவர்கள் ஒவ்வொரு நாளும் அங்கு கிரிக்கெட் விளையாடினார்கள். ஒரு வாரம் முடிந்தவுடன் பெரியவர் அவர்களுக்கு ஆயிரம் ருபாய் கொடுத்தார். இரண்டாவது வாரம் அவர்கள் பணம் கேட்டபோது, திடீரென செலவு வந்து விட்டதாகக் கூறி இருநூறு ருபாய் மட்டுமே கொடுத்தார். மூன்றாவது வாரம் ஓய்வூதியம் இன்னும் வரவில்லை எனக்கூறி நூறு ருபாய் கொடுத்தார். நான்காவது வாரம், தன்னால் இனி ஒரு வாரத்திற்கு ஐம்பது ருபாய்தான் கொடுக்கலாம் என்றார். சிறுவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது.

''வாரம் முழுவதும் விளையாடுவதற்கு வெறும் ஐம்பது ருபாயா? இனி நாங்கள் இங்கே விளையாட வரமாட்டோம்'' என்று கூறிச் சென்றுவிட்டனர். முதியவரும் திருப்தியுடன் இனி தொல்லை தீர்ந்தது என தனது வீட்டுக்குள் சென்றார்.




## இலங்கையின் மாகாணங்களும் தலைநகரங்களும்

- மத்திய மாகாணம் - கண்டி
- வடமாகாணம் - யாழ்ப்பாணம்
- கிழக்கு மாகாணம் - திருகோணமலை
- வடமேல் மாகாணம் - புத்தளம்
- தென் மாகாணம் - காலி
- மேல் மாகாணம் - கொழும்பு
- வடமத்திய மாகாணம் - அனுராதபுரம்
- ஊவா மாகாணம் - பதுளை
- சப்ரகமுவ மாகாணம் - இரத்தினபுரி

எச்.எஸ்.நுசைரா,
அல்-அக்ஷா மு.ம.வித்.,
இரத்தினபுரி.

## துணுக்குகள் சில...

★ ஒருவரிடம் புதிய பேனாவைக் கொடுத்து எழுதச்சொன்னால் உலகில் அதிகமானோர் தமது பெயர்களையே எழுதிப்பார்க்கின்றனர்.


★ மனித நுரையீரலை கிடையாக விரித்தால் அதனை ஒரு டெனிஸ் திடலின் அளவிற்குப் பரப்பலாம்.

★ உலகப் புகழ்பெற்ற மோனாலிசா ஓவியத்திற்கு கண்ணிமைகள் இல்லை. மறுமலர்ச்சிக்கால கட்டத்தில் கண்ணிமைகளை சவரம் செய்வதே நாகரிகமாகும்.

...ஜஹான், க/உடுதெனிய மு.ம.வித்., உடுதெனிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல.115



**மேலிருந்து கீழ்**

1. மூலிகைச் செடியொன்று.
2. மூன்று பாதைகள் சந்திக்குமிடம்.
3. மனித உடலில் சுவை அறியும் பாகம்.
6. தேனீக்கள் பூக்களில் இருந்து சேகரிப்பது.
8. உயிர். (தலைகீழ்)
9. பரிசு. (தலைகீழ்)

**இடமிருந்து வலம்**

1. கப்பல்கள் வந்து தங்கிச் செல்லக்கூடிய இடம்.
4. 'சிவன்+சக்தி' என்பதை சேர்த்தெழுதினால் வருவது.
5. ஆலயங்களில் இதன் ஓசை கேட்கும்.
7. பஞ்சபாண்டவர்களின் தாயார். (மாறியுள்ளது)
8. பசு.
9. 'உள்' என்பதன் எதிர்ப்பதம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.114 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மு | க் | கா | டு | | 2 தொ |
| தி | | க் | | 3 ஏ | ழு |
| ய | | 4 அ | டி | | வ |
| 5 வ | ரி | | 6 மு | ற | ம் |
| ர் | தி | 7 பு | | | |
| | 8 எ | | ல் | த | 9 நு |




'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 17.12.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

நடராஜ் அறிவுக்கு விருந்து - 54
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=
பரிசுப் பொதி



நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.

## நடராஜ் அறிவுக்கு விருந்து - 52 விடைகள்


**போட்டி: 01**

கிடைக்க வேண்டிய மீதிப் பணம்




**போட்டி: 02**

A




B




**போட்டி: 03**



## நடராஜ் அறிவுக்கு விருந்து - 52 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**1ஆம் பரிசு**
**எஃப்.ஃஸ்ப்வானா, வெலிகம.**

**2ஆம் பரிசு**
**சி.லதுர்ஷன், நாவலப்பிட்டி.**

**3ஆம் பரிசு**
**எஸ்.நிருஜா, கொலன்னாவ.**


**பாராட்டுப் பெறுவோர்:**

- எம்.பஹீஜ், கிண்ணியா-04.
- நிவ்வியன் அஜய், மன்னார்.
- ச.தானிஜன், வட்டுக்கோட்டை.
- எஃப்.சாஜிதா மாத்தளை.
- இஸட். அறபா, பொல்கஹவளை.
- ஆர்.ரன்தா, தீவுகட.
- பா.அக்ஷனா, செங்கலடி.
- யூனுஸ் அஹமத், கம்பஹா.
- என்.ரேணு, வத்தளை.
- பி.நிரூபன், கல்முனை.


## 1

**படத் தரவுகளுக்கமைய அருகிலுள்ள சொற்களை எழுதி, குறுக்கெழுத்துப் போட்டியைப் பூர்த்திசெய்க**


Helicopter, Train, Bicycle
Car, Motorcycle, Lorry
Boat, Sail Boat, Plane




## இடைவெளிகளை நிரப்புக 2




## விடை தருக 3



Sponsored by
NATARAJ®
Packsco Ceylon (Pvt) Ltd, P.O Box-165, Colombo-03

noolaham.org | aavanaham.org

# உலக தமிழ் மொழிப் பயன்பாடும் அதன் சிறப்பும்



தமிழ்மொழி 70 மில்லியன் மக்களின் தாய்மொழியும் 8 மில்லியன் மக்களின் இரண்டாம் மொழியாகவும் உள்ளது. திராவிட மொழியாகிய இதனை தென்னிந்தியா (தமிழ்நாடு), இலங்கை (வட-கிழக்கு), மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அதிகமாகவும்; கனடா, ஐக்கிய அரசு இராச்சியம், அமெரிக்கா, தென்னாபிரிக்கா, மொரிசியஸ், பிஜி, அவுஸ்திரேலியா, டிரினிடாட் மற்றும் தமிழ் சமூகம் குடியேறிய நாடுகளில் சிறிதளவிலும் பயன்பாட்டில் உள்ளது. இந்தியா, இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அரச அங்கீகாரத்துடன் தமிழ்மொழி காணப்படுகின்றது.

தமிழ்மொழி, உயிர் வாழும் மிகப் பழமையான செம்மொழிகளில் ஒன்று. தமிழ் இலக்கியம் 2000 வருடங்களுக்கு (3000 வருடங்களுக்கு மேல் எனவும் கருதப்படுகின்றது) மேற்பட்ட வரலாற்றைக் கொண்டது. இதற்கான தடயங்கள் கி.பி 3 ஆம் நூற்றாண்டு பழமையான பாறைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியத்தில் புராதன இலக்கியமான சங்க இலக்கியங்கள் ஏறக்குறைய கி.மு 300 முதல் கி.பி 300 வரையான காலத்தையுடையவை. ஏறக்குறைய கி.மு முதலாம் நூற்றாண்டு முதல் கி.பி இரண்டாம் நூற்றாண்டு வரையான கல்வெட்டுக்கள் இந்தியா, எகிப்து, இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட 55 வீதமான கல்வெட்டு எழுத்துக்கள் (கிட்டத்தட்ட 55,000) தமிழ் மொழிக்குரியவை. உலக மொழிப் பயன்பாட்டில் தமிழ்மொழி சிறப்பிடத்தைப் பெறுவதுடன் அண்மைய ஆய்வுகளின்படி உலகில் 1863 செய்தித் தாள்கள் தமிழில் அச்சிடப்பட்டும் வருகின்றன.



பேறகஸ்வத்தையைச் சேர்ந்த றைதீன்-ரிஹானா தம்பதியரின் செல்வப் புதல்வன் ரீஸா அஹமட், தனது நான்காவது பிறந்தநாளை 14.12.2014 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: றகுமான்)



பெரிய பரந்தனைச் சேர்ந்த திருவரதன்-சசீதா தம்பதியரின் செல்வப் புதல்வி யதுஷாயினி, தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளை 05.12.2014 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறையருள் பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



நாவலப்பிட்டியைச் சேர்ந்த ராஜேந்திரன்-அழகுசுந்தரி தம்பதியரின் செல்வப் புதல்வி கயல்விழி, தனது எட்டாவது பிறந்தநாளை 30.11.2014 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: விஜிதா)



தோப்பூர்-06 இல் வசிக்கும் முகம்மட் லரீப்-சிபானா தம்பதியரின் செல்வப் புதல்வன் அம்மார் அஹம்மட், தனது ஆறாவது பிறந்ததினத்தை 20.11.2014 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.





அண்மையில் கொஸ்லந்த பகுதியில் இடம்பெற்ற மண்சரிவினால் பாதிக்கப்பட்டு பூனாகலை தேயிலை தொழிற்சாலை முகாமில் தங்கியிருக்கும் மக்களை சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் (USAID) இயக்குனர் ஷெரீ கார்லின் சந்தித்ததுடன், World Vision மனிதாபிமான பிரதிநிதிகளுடன் இணைந்து சிறுவர்களுக்கு கல்வி உபகரணங்களை விநியோகித்ததுடன் அவர்களுடன் கலந்துரையாடுவதையும் காணலாம்.



சிம்ரா நஸாத்,
பு/பாத்திமா மு.ம.கல்.,
புத்தளம்.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



பி.டிலுக்ஷன்,
கு/சி/சி/ தமிழ் வித்.,
பொல்கஹாவெல.



சி.அனுசியா,
சென்மேரிஸ் மத்.கல்.,
போகவந்தலாவை.



எம்.அம்ஹார்,
அல்-ஹுதா மு.பாட., நிதிகம.



செ.சஸ்மினி,
கோப்பாய் நாவலர் த.வித்., கோப்பாய்.

## புலமைப்பரிசில் விடைகள்

(டிசம்பர் 3 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

### தமிழ்

01) 1. நீர்
2. ஆறு, குளம், ஏரி, நீர்வீழ்ச்சி, கிணறு
3. குடிக்க, குளிக்க, சமைக்க, தூய்மையாக்க, தாவரங்களுக்கு
4. மீன்பிடித்தொழில், தும்புக் கைத்தொழில்
5. குழாய்மூலம் 6. குளோரின்மூலம்
7. நதி 8. கொதிக்க வைத்து

02) 1. திறந்தபடி இருக்கும் மின்கம்பிகளை தொடுதல் ஆகாது.
2. தரை ஈரமாக இருக்கும்பொழுது கைகளினால் மின்சாதனங்களை பிடிக்கக்கூடாது.
3. இலங்கை நான்கு புறங்களும் கடலால் சூழப்பட்டுள்ள தீவாகும்.

03) 1. மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு ஏறி முட்டியது போல்.
2. தினை விதைப்பவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்.


04) 1. தண்டுகள் 2. உண்பேன் 3. சிறிய
4. பெரிது சிறிது 5. வட்டம்

05) 1. இரவு 2. குறுகிய 3. இல்லை
4. போ 5. காடு

06) 1. காடு/வனம் 2. மலர்கள்
3. இல்லம்/ மனை 4. ஆகாயம்/விசும்பு 5. வீதி

07) கருத்துப் புலப்பட வாக்கியம் அமைத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சுபநிகழ்வுகளில் ஏன் வாழைமரம்?

சுபகாரியங்கள், நிகழ்வுகள் நடைபெறும் வீடுகளில் அதற்கு அடையாளமாக வாழைமரம் கட்டப்பட்டிருப்பதை நீங்கள் கண்டிருக்கலாம். இது அழகுக்காக கட்டப்படுவதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால், திருமண வீடுகளில் புதுமணத்தம்பதிகள் வாழையடி வாழையாக தழைத்து வாழவேண்டும் என்பது ஆன்மீக காரணமாக இருக்கின்றது. அத்துடன், இதற்கு ஓர் அறிவியல் காரணமும் உண்டு. அது என்னவென்றால், தாவரங்கள் காற்றில் இருக்கும் காபன்டை ஒக்சைட்டை உறிஞ்சிக்கொண்டு ஓட்சிசனைப் பரவச் செய்கின்றன. சுபநிகழ்வுக்கு வருகை தரும் விருந்தினர்கள் விடும் மூச்சுக் காற்றிலுள்ள காபன் டை ஒக்சைட் காற்றில் கலக்கும்போது அனைவரதும் உடல் வெப்பம், வியர்வை மணமும் சேர்ந்துகொள்ளும். அதன்போது, அங்கு கட்டப்பட்டிருக்கும் மாவிலைத் தோரணங்களும், வாழை மரங்களும் காற்றில் பரவியிருக்கும் கிருமிகளை அழிப்பதோடு, வெப்பத்தையும் உறிஞ்சிக் கொள்கின்றன.

# சிலிண்டரின் உள்ளே எரிவாயு பற்றிக்கொள்ளுமா?





நாம் சமையலுக்கு உபயோகிக்கும் எரிவாயு (Gas) என்-பியூட்டேன் (N-Butane) என்பதாகும். சிலிண்டர் வால்வைத் திறந்ததும் எரிவாயு வெளியேறி அடுப்பின் [illegible]னர் பகுதியை வந்தடைகிறது. அப்போது ஒரு தீக்குச்சியால் பற்ற வைக்கும்போது, சமையல் வாயு 360°C வெப்பத்தை அடைந்து பற்றிக்கொள்கிறது. அடுப்பைச் சுற்றிலும் தேவையான அளவு ஒட்சிசன் இருப்பதால் தொடர்ந்து எரிகிறது.


சிலிண்டரின் உள்ளே உள்ள எரிவாயு பற்றிக்கொள்ள வேண்டுமெனின், வெப்பமும், ஒட்சிசனும் சிலிண்டரின் உள்ளே செல்ல வேண்டும். பர்னர் பகுதியிலிருந்து வெப்பம் றப்பர் குழாய்களைத் தாண்டி சிலிண்டரின் வாய்ப்பகுதியை அடைந்து உள்ளே பரவ வேண்டும். இது முற்றிலும் சாத்தியமில்லை. சிலிண்டரின் உள்ளே உள்ள எரிவாயு மிக மிக உயர்ந்த அழுத்தத்துடன் அடைக்கப்பட்டுள்ளது. எனவே, சிலிண்டரின் உள்ளே இருக்கும் அழுத்தம் வெளியிலுள்ள சுற்றுப்புற அழுத்தத்தைவிட (Atmospheric Pressure) பல மடங்கு அதிகம். எனவே, வெளியிலிருந்து அழுத்தம் குறைந்த ஒட்சிசன் அழுத்தம் அதிகம் உள்ள சிலிண்டரின் உள்ளே நுழைவது சாத்தியமில்லை. இந்த இரு காரணங்களால் சிலிண்டரின் உள்ளே இருக்கும் எரிபொருள் பற்றிக்கொள்வதற்கான வாய்ப்பே இல்லை.

# ஓவியம் வரைவோம்

## யானை ஒன்றை எவ்வாறு வரையலாம்?




# நீர்வீழ்ச்சியின் நீர் வெள்ளையாகத் தெரிவது எப்படி?



ஒரு பொருளின் மேற்பரப்பு அனைத்து நிறங்களையும் பிரதிபலித்தால் அது வெண்மையாகத் தோன்றும். நீர்வீழ்ச்சியின் நீரானது, காற்றைக் கடந்து கீழே விழுகிறது. அதன்போது அது நீரும் காற்றும் கலந்த, சீரற்ற ஒரு கலவையாகவே விழுகிறது. வழக்கமாக, நீருக்கு வெளியே உள்ள அடர்த்தி குறைந்த காற்று ஊடகத்திலிருந்து, அடர்த்தியான நீர் ஊடகத்திற்குள் ஒளிபுகும்போது, அதன் மேற்பரப்பு சிறிது ஒளியை எதிரொளிக்கிறது. எஞ்சிய ஒளி விலகிச் செல்கிறது. இதுவே ஒளிவிலகல் ஆகும். நீர்வீழ்ச்சிகளில் ஒளி அதிக அளவில் எதிரொளிக்கப்படுகிறது. அதேநேரம், ஒளிவிலகலும் மிக அதிகமாக நடைபெறுகின்றது.

நீர்வீழ்ச்சியின் உச்சத்தில் உள்ள நீர் அடுக்கில் ஏற்படும் ஒளிவிலகல், அதற்கு அடுத்த அடுக்கில் உள்ள நீர்த்துளிகள் ஒளியை எதிரொளிக்க உதவுகிறது. இதன் காரணமாக, நீர்வீழ்ச்சியில் பெரும்பாலான ஒளி எதிரொளிக்கப்படுகிறது. இதனால், நீர்வீழ்ச்சி வெண்மை நிறத்தில் தோற்றமளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரணர் ஆலோசனை

## விஜய் சாரணர் உலகம்

*சாரணர் திறமைகாண் சின்னங்களைப் பெற...*

சாரணர் திறமைகாண் சின்னங்கள் பெறவேண்டுமாயின், வைபவம் ஒன்றை ஒழுங்கு செய்ய வேண்டும். இது துருப்புக்கூட்டத்தின் கூட்ட ஆரம்பத்தில் அல்லது முடிவில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்போது, அனைத்து குழுவினரும் வருகை தந்திருத்தல் அவசியமாகும். அங்கு சின்னங்கள், அவற்றின் முக்கியத்துவம் மற்றும் பாடத்திட்டத்திலுள்ள விடயங்கள் பற்றி சாரணர் தலைவர் உரையாற்றுவதுடன், சின்னம்




பெறுபவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கவும் வேண்டும். அதன் பின்னர் சரணன், சாரணத் தலைவருக்கு முன்னால் வந்து நின்று வணக்கச் சைகை செய்தல் வேண்டும். அவருக்கு பதில் வணக்கச் சைகை செய்யும் சாரணர் தலைவர் சாரணருக்கு அவரது சீருடையில் சின்னத்தினை அணிவிக்கவேண்டும்.

சாரணர் சீருடை அணிந்திராவிட்டால், சின்னத்தை அவரது கையில் கொடுத்தல் வேண்டும். அதன்பின் இடது கை கொடுத்து வாழ்த்து தெரிவிக்க வேண்டும். பின்பு சாரணன் தனது துருப்புக்கு திரும்பி வணக்கச் சைகை செய்து தனது அணிக்கு செல்வார். அணிக்கு செல்லும்போது துருப்பில் உள்ள அனைவரும் கைகளைத்தட்டி ஆரவாரம் செய்வார்கள். தகுதிகாண் சின்னம் வழங்கும்போது மேற்கூறியவாறே செய்தல் வேண்டும். இது ஒரு பெரிய வைபவமாகும். இதுதவிர, குழுகொண்டாட்டங்கள், பெற்றோர் தினம், மாவட்ட ஒன்றுகூடல் போன்ற வைபவங்களிலும் தகுதிகாண் சின்னங்களை வழங்கலாம்.

## காட்சிப் பொருட்களை வைக்கலாம்!





சாரணர் பாசறைகளிலும் வேறு சந்தர்ப்பங்களிலும் அணியின் பொருட்களை வைப்பதற்காகவும் வீட்டின் வரவேற்பறையில் அழகிய பொருட்களை காட்சிப்படுத்தவும் மேலும் அவ்வாறான பொருட்களை வைப்பதற்கான கதிரை, மேசை மற்றும் கொடிக் கம்பம் போன்றவற்றை தடிகள், கயிறுகளை பயன்படுத்தி அமைக்கலாம். அவ்வாறானவையே இவை.

## சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரண உறுப்பினர்கள் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| ஜோர்ஜியா | 1,568 | 1997 | 1994 |

தொகுப்பு: ஜனாதிபதி சா்ரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)


## கிளிநொச்சி, மகாதேவ ஆசிரம சிறுவர் இல்லத்தின் திறந்த சாரணர் குழு

கிளிநொச்சி, மகாதேவ ஆசிரம சிறுவர் இல்லத்தின் சாரணர் குழு, இலங்கையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சிங்கித்தி சாரணர் பிரிவு உட்பட, குருளைச் சாரணர் பிரிவு, சாரணர் பிரிவு, திரி சாரணர் பிரிவு முதலியன ஒருமித்திருக்கும் சாரணர் குழுவாக காணப்படுகின்றது. அத்துடன், இது வட மாகாணத்தில் திறந்த குழுவாக (பாடசாலைகளில் இல்லாது தனிமையாக பதிவு பெறும் குழு) செயற்பட்டும் வருகின்றது. இவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் மகாதேவ ஆசிரம சிறுவர் இல்லத்தில் நடைபெற்றபோது மகாதேவ ஆசிரம சிறுவர் இல்லத்தின் தலைவரும், கிளிநொச்சி சாரணர் மாவட்ட செயற்குழுவின் கௌரவ செயலாளரும், முன்னாள் கிளிநொச்சி அரசாங்க அதிபருமான தி.இராசநாயகம் மற்றும் தேசிய தலைமைக் காரியாலய ஆணையாளர் ந.சௌந்தர்ராஜன், கிளிநொச்சி மாவட்ட சாரணர் ஆணையாளர் கி.விக்னராஜா உட்பட பலரும் கலந்துகொண்டனர். அவ்விழா தொடர்பான படங்களை இங்கு காணலாம்.





## கழிவுப் பொருளில் உலங்கு வானூர்தி



கழிவுப்பொருளாக வீசப்படும் ப்ளாஸ்டிக் போத்தல் மற்றும் உறிஞ்சிக் குழாய், சிறிய உருளை, பந்து முதலியவற்றைக் கொண்டு இவ்வாறான வானூர்தியை தயாரிக்கலாம். கழிவுப் பொருட்களைப் பெற்று அதற்கு வடிவம் கொடுப்பதில் சாரணர்கள் ஆற்றல் நிறைந்தவர்கள். படத்தில் காட்டியுள்ளவாறு பெருட்களைக்கொண்டு தயாரிக்கப்படும் இவ்வகையான உலங்கு வானூர்தி அவர்களுக்கு பாசறைகளில் மட்டுமன்றி, சாரணர்களின் ஏனைய தேவைகளுக்கும் அழகுப் பொருளாகப் பயன்படக்கூடும். இதனைத் தயாரிக்கும்போது பாதுகாப்பான முறையில் பெரியோரின் உதவியையும் முதலுதவிப் பொருட்களுடனும் மேற்கொள்வது விரும்பத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சொத்தாகக் கருதப்படும் ஈரநிலங்கள்

எமது அன்றாட தேவைகளுக்காக நாம் ஆறு, வாவி, நீர்வீழ்ச்சிகள், கிணறுகள் ஆகியவற்றிலிருந்து நீரினைப் பெற்றுக்கொள்கின்றோம். இந்த நீரினை அருந்துவதற்கும், உணவுகள் சமைப்பதற்கும், சுகாதார தேவைகளுக்காகவும், பயிர்ச்செய்கைகளுக்காகவும் என பல்வேறு தேவைகளுக்காக நாம் பயன்படுத்திக்கொள்கின்றோம். இதில் உவர் நீர், நன்னீர், சதுப்பு நில நீர் என்ற அடிப்படையில் உருவாகிய ஈரநில சுற்றாடற் தொகுதிகளும் அடங்குகின்றன. இங்கு நீரும், தாவரங்களும், விலங்குகளும் இணைந்த சமூக பொருளாதார பின்னணியினையும் காண முடிகின்றது.

மனிதனின் பல்வேறு செயற்பாடுகளின் காரணமாக, ஈரநில சுற்றாடற் தொகுதிகளில் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதில் இருந்து நீர் வளத்தினைப் பாதுகாக்க வேண்டுமாயின், ஈரநிலங்களைப் பாதுகாப்பது அவசியமாகின்றது. இந்த ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கு சர்வதேச ரீதியில் பல உடன்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள் ரம்சார் உடன்படிக்கை மிகவும் முக்கியமானதாகும். இந்த ரம்சார் உடன்படிக்கையின்கீழ், 1997 பெப்ரவரி 2 ஆம் திகதி 'சர்வதேச ஈரநிலங்கள் தினம்' பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த ஈரநிலப்பகுதிகள் உலக மொத்த நிலப்பரப்பில் 6 சதவீதமாகவும் உள்ளது.









## ஈரநிலங்கள் என்றால் என்ன?

தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ நீரில் மூழ்கியுள்ள சதுப்பு நிலங்கள் அல்லது அசையாத நன்னீர், உவர்நீர் நிலங்கள் ஈரநிலங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

## ஈரநிலங்களின் பயன்கள்

**நீர்** - அருந்துவதற்கு, குளிப்பதற்கு, சுகாதாரத்தினைப் பேணுவதற்கு, விளையாட்டுக்களுக்கு என பல்வேறு தேவைகளுக்காக பயன்படுகின்றது.

**உணவுகள்**- அரிசி, காய்கறிகள், பழங்கள், கீரை வகைகள் மற்றும் மீன்கள் கிடைக்கின்றன.

**மருந்துகள்** - பலவகையான மருத்துவக் குணம் மிக்க மூலிகைத் தாவரங்கள் கிடைக்கின்றன.

**தொழிற்சாலைகளுக்கான மூலப்பொருட்கள்**- பாய் பின்னுவதற்கான புல் வகைகள், கட்டடப் பொருட்கள் (சுண்ணாம்பு, விறகுகள்)

**எரிபொருள்**- விறகு, கரி

**பொழுதுபோக்கு**- பறவைகளை ரசித்தல், படகு சவாரிகள், நீச்சல்

**தொழிற்துறை**- விவசாயம், மீன்பிடி, வீட்டுக் கைத்தொழில், சுற்றுலாத்துறை மற்றும் போக்குவரத்து

## ஈரநிலத்தினால் சுற்றாடலுக்குக் கிடைக்கும் நன்மைகள்

- நீர்வாழ் உயிரினங்கள் உருவாகக் காரணமாகின்றது.
- வெள்ளப்பெருக்கினைக் கட்டுப்படுத்துகின்றது.
- நிலத்தடி நீரினைப் பாதுகாக்கின்றது.
- நீர்வாழ் உயிரினங்களுக்கும் அச்சுற்றாடலில் வாழும் உயிரினங்களுக்கும் உணவு, வாழ்விடம், இனப்பெருக்க வசதி என்பனவற்றை வழங்குகின்றது.
- சுனாமி போன்ற அனர்த்தங்களின்போது, கரையோரப்பகுதிகளையும், தரைப்பகுதிகளையும் பாதுகாக்கின்றது.
- கடலரிப்பினைத் தடுக்கின்றது.

## இலங்கையில் ரம்சார் ஈரநிலங்கள்

1. பூந்தல தேசிய வனவிலங்கியல்
2. ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதி
3. மாதுகங்கை சுற்றாடற் தொகுதி
4. குமண சரணாலயம்
5. வங்காலை சரணாலயம்
6. வில்பத்து சரணாலயம்

**ரம்சார் ஒப்பந்தம்**

1971 பெப்ரவரி 2 ஆம் திகதி ஈரானின் ரம்சார் நகரில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையினையே ரம்சார் ஒப்பந்தம் என்று அழைக்கின்றனர். ஈரநிலங்களில் காணப்படும் சுற்றாடல், பொருளாதார சமூக முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையின்கீழ் உலகம் முழுவதும் உள்ள ஈரநிலங்கள் 'ரம்சார் ஈரநிலங்கள்' என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

# உலக ஈரநில குறுக்கெழுத்துப் போட்டி

விஜய்

### போட்டி விபரம்

2015 பெப்ரவரி 02 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக ஈரநில தினத்தையொட்டி மேற்கொள்ளப்படவுள்ள தேசிய வைபவத்திற்கு சமாந்தரமாக 'விஜய்' பத்திரிகையின் ஊடக அனுசரணையில் வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை இணைந்து உலக ஈரநில தின குறுக்கெழுத்துப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

### பரிசு விபரங்கள்

- ★ ஈரநில குறுக்கெழுத்துப் போட்டியிலிருந்து வாரம்தோறும் 10 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு, பெறுமதிவாய்ந்த புத்தகப் பொதிகள் பரிசாக வழங்கப்படும்.
- ★ தொடர்ச்சியாக பிரசுரமாகவுள்ள மேற்படி போட்டியில் பங்குபற்றுகின்ற அனைத்துப் போட்டியாளர்களின் கூப்பன்களும் இறுதிக் குலுக்கல் போட்டிக்கு சேர்க்கப்படுவதுடன், இதிலிருந்து 15 பேர் தெரிவுசெய்யப்பட்டு (சகோதர 'விஜய' பத்திரிகையும் அடங்கலாக) பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.

### வில்பத்துவில் ஒருநாள் தங்கும் வாய்ப்பு

ஈரநில தேசிய வைபவங்கள் இம்முறை வில்பத்து சரணாலயப் பகுதிகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதுடன், வெற்றியாளர்கள் இந்நிகழ்வில் தமது குடும்பத்தினருடன் கலந்துகொள்வதற்கும் சரணாலயத்தில் ஒருநாள் இரவு தங்கியிருந்து அதன் வனப்பை நேரில் சுற்றிப்பார்த்து மகிழவும் வாய்ப்பு வழங்கப்படும்.

வாராந்தம் 10 பேருக்கு புத்தகப் பொதிகள்

15 பேருக்கு -[பெற்றோருடன்] வில்பத்து சரணாலயத்தை இரவு தங்கியிருந்து சுற்றிப் பார்க்கும் வாய்ப்பு...

தயாராகுங்கள்...
போட்டி அடுத்த வாரம் ஆரம்பம்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காண்டாமிருகங்கள் உலகிலிருந்து விடைபெறுமா...?



காண்டாமிருகங்களின் கொம்புகள், யானைகளின் தந்தத்திற்கு நிகரான விலையில் விற்கப்படுவதனால், பெறுமதிமிக்க அந்த கொம்புகளைப் பெற்றுக்கொள்வதற்காக காண்டாமிருகங்கள் பாரியளவில் வேட்டையாடப்பட்டு வருகின்றன. இதனால், உலகளவில் காண்டாமிருகங்களின் இனம் அழியும் நிலையை எட்டியுள்ளது என அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பொன்றின்மூலம் தெரியவந்துள்ளது.

உலகில் 5 வகையான காண்டாமிருகங்கள் உள்ளன. முன்னர் வட அமெரிக்கா, ஆபிரிக்கா, ஐரோப்பா, ஆசியா போன்ற கண்டங்களில் பரந்தளவில் காணப்பட்ட காண்டாமிருகங்களை, இன்றளவில் ஆபிரிக்கா, ஆசியா போன்ற கண்டங்களில் மட்டுமே காணக்கூடியதாக இருக்கின்றது. ஆபிரிக்காவிலுள்ள காண்டாமிருகங்களும் சுமாத்ரன் இன காண்டாமிருகங்களும் இரண்டு கொம்புகளை உடையவை. இந்தியன் மற்றும் ஜாவன் இன காண்டாமிருகங்களுக்கு ஒரு கொம்பு மட்டுமே காணப்படும். 10 செ.மீ. முதல் 158 செ.மீ. நீளம் வரை அவற்றின் கொம்புகள் வளரும்.



இவற்றின் கொம்பில் கெரட்டின் எனும் வேதிப் பொருள் உள்ளதால், அது மருத்துவப் பயன்பாடு கொண்டதாகக் கருதப்படுகின்றது. இன்னும் சில ஆசிய நாடுகளில் காண்டாமிருகத்தின் கொம்பு தூளாக்கப்பட்டு மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதில் சிறிதளவேனும் உட்கொள்வதானது, காய்ச்சல் மற்றும் புற்றுநோய்களைக் குணப்படுத்தும் என அந்நாடுகளில் வாழும் மக்கள் நம்புகின்றனர். இன்னும் சில நாடுகளில் சிறிய வாள் போன்ற ஆயுதத்தை தயாரிப்பதற்காகவும் ஆடம்பரமான அலங்காரப் பொருட்களின் தயாரிப்புக்காகவும் காண்டாமிருகத்தின் கொம்புகள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு பல்வேறு தேவைகளுக்காக கொம்புகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில், காண்டாமிருகங்கள் பெருமளவில் வேட்டையாடப்பட்டு வருவதனால், அவை அழிந்து வரும் விலங்கினமாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.




# கண்களை சுத்தப்படுத்தும் கண்ணீர்



கண்களில் அமைந்துள்ள கண்ணீர்ச் சுரப்பிகளிலிருந்து சுரக்கப்படுகின்ற ஒரு திரவமே 'கண்ணீர்' ஆகும். கண் அழற்சியின் போதும் அழுகை, எல்லையற்ற மகிழ்ச்சி, துக்கம் போன்ற மன உணர்ச்சிகளின்போதும் தொடர்ந்து கொட்டாவி விடும்போதும் நாம் கண்ணீர் சிந்துவதுண்டு. கண்ணீரில் நீர், உப்புகள், பிறபொருளெதிரிகள் மற்றும் நொதியங்கள் என்பன அடங்கி உள்ளதோடு, அழும்போது சிந்தும் கண்ணீரில் ஹோர்மோன்களும் அடங்கியுள்ளதாம்!

காயம்பட்ட ஒருவர் கண்ணீர் சிந்தி அழும் போது, அவரின் காயம் விரைவில் குணமடையும் என்றும் கூறப்படுகின்றது. இதற்கு காரணம், மனிதனின் கண்ணீரில் அடங்கியுள்ள ஒருவித ரசாயனப் பதார்த்தமாகும். மனிதன் சிந்தும் கண்ணீரில் ஒரு துளியை, 6 ஆயிரம் நீர்த்துளிகளில் கலந்தாலும், அந்த நீர்த்துளிகளுடன் கலந்துள்ள ஒரு துளி கண்ணீர், நூற்றுக் கணக்கான நோய்க் கிருமிகளைக் கொல்லும் சக்தி கொண்டதாக இருக்கும்.


## கண்ணீர்ச் சுரப்பியின் அமைப்பு




# இவ்வார கார்ட்டூன் படம்





இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014, டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 10, 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org